# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு2031 மாசி 13 வெள்ளிக்கிழமை (25~02~2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:78


உறவினர்கள் இன்று தென் பகுதி திரும்புகின்றனர்

# சிப்பாய்களை விடுவிக்கும் முயற்சியில் அரசு ஈடுபடும் தகவல் எதுவும் இல்லை!

## செஞ்சிலுவை அதிகாரி ஹர்ஷா தெரிவிப்பு

கொழும்பு,பெப்ரவரி 25

**புதுக்குடியிருப்பில் கடந்த 15 நாள்களாக உண்ணாவிரதம் இருந்துவரும் யுத்தக்கைதிகள் தொடர்பாக அரசு தரப்பில் இருந்து எந்தவிதத் தகவலும் கிடைக்கவில்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி ஹர்ஷா குணவர்த்தனா தெரிவித்தார்.**

விடுதலைப் புலிகள் வசம் உள்ள 15 யுத்தக்கைதிகளும் தம்மை விடுதலை செய்யக்கோரி ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 15 ஆவது நாளாகத் தொடர்ந்து இடம்பெற்றது.

தமது விடுதலை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என்று தமக்கு செஞ் சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அரசாங்கம் அறிவித்துள்ளதாக உண்ணாவிரதிகளில்

(12ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



இதைத்தான் சொல்லுறது பாருங்கோ. சுடலை ஞானம் எண்டு...!

## குருநகர், பாஷையூர் கடலில் மீன்பிடிக்கப் படையினர் அனுமதி

ஞாயிறு அல்லது திங்கள் தொழிலுக்குச் செல்வர்

யாழ்ப்பாணம்,பெப்.25

குருநகர்,பாஷையூர் கடற்பகுதியில் மீன்பிடிக்கப் படையினர் அனுமதி வழங்கியுள்ளதாக யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.ஜெகன் தெரிவித்தார்.

பலாலியில் யாழ். மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்தினாவுடன் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுக்களின் பயனாகவும் - அச்செழுவில் 51ஆவது படையணி கட்டளை அதிகாரி பிரிகேடியர் காமினி ஜெயசுந்தர மற்றும் கடற்படை அதிகாரிகளுடன் நேற்று நடத்திய பேச்சுக்களின் பயனாகவும் - மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் சொன்னார்.

நாளை கடற்றொழிலாளர் சங்கப்பிரதிநிதிகளுக்கும் படை

(12ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தம் உடன் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் தவறினால் எதிர்காலச் சந்ததி எம்மீது பழிபோடும்

## சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு,பெப்.25

இந்த நாட்டில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வரும் யுத்தம் உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும். இல்லாவிட்டால் எதிர்கால சந்ததியினர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மீது பழிசுமத்துவர் என்பது மட்டும் உண்மை.

மேற்கண்டவாறு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதை பின் தள்ளி வைப்பதன் மூலம் எமக்கு உள்ள தற்போதைய மாபெரும் பொறுப்பை நாம் தட்டிக் கழித்து வருகின்றோம்.

யுத்தத்தின் மூலம் நாம் பெற்றுக் கொண்ட பெறுபேறுகள் நிரந்தரமானவை அல்ல. அவை எதிர்கால சந்ததியினர் மத்தியில் அலட்சியப்போக்கையே ஏற்படுத்தும்.

தாக்குதல் நடவடிக்கைகள் நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்போது ஆயிரக்கணக்கானோர் இறந் துள்ளனர். மேலும் பல சிறுவர்களும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் ஒருவரைக் காணோம்

யாழ்ப்பாணம்,பெப்.25

வரணி வடக்குப் பகுதியில் கடந்த 21ஆம் திகதி முதல் இளைஞர் ஒருவர் காணாமல் போய்விட்டார் என மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த இராஜேந்திரம் இரவிக்குமார் (வயது 24) என்பவரே காணாமற்போனவர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## மாநகர சபைக் கூட்டத்தில் காரசாரமான விவாதம்

யாழ்.மாநகர சபையின் புத்தாயிரமாமாண்டுக்கான முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்ற சமயம் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

பிரதி மேயர் என்.ரவிராஜ் தலைமையில் நேற்று நண்பகல்நடந்த கூட்டத்தில் கடந்த வருட செயற்பாடுகள், திட்டங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வெடிகுண்டு நிபுணர் நீர்கொழும்புப் பகுதியில் கைதாம்!

பொலீஸார் கூறுகின்றனர்

கொழும்பு,பெப்.25

அதிசக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு ஒன்றையும், மற்றும் ஒரு தொகுதி வெடிமருந்துகளையும் வைத்திருந்த விடுதலைப் புலிகளின் வெடிகுண்டு நிபுணர் ஒருவரை நேற்றுமுன்தினம் நீர்கொழும்பில் வைத்துக் கைது செய்துள்ளதாகப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

சந்திரகுமார் றொபேட் புஸ்பராஜா (வயது 22) என்பவரே 2 கிலோ எடையுள்ள கிளைமோர் கண்ணிவெடி ஒன்றை எந்த நேரத்திலும் வெடிக்கக்கூடிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் முயற்சியை வரவேற்கும் கூட்டணியின் பிரேரணை பிசுபிசுப்பு

ஏனைய கட்சிகளின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.25

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நோர்வே அரசும் ஸ்ரீலங்கா அரசும் மேற்கொண்டுள்ள முன் முயற்சிகளை வரவேற்கும் வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் கொண்டு வந்த பிரேரணை எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

யாழ். மாநகர சபையின் மாதாந்தக்கூட்டம் நேற்றுப் பகல் 12.00 மணிக்கு நடைபெற்ற சமயமே தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பிரதிமேயர் என்.ரவிராஜ் இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்தார்.

"இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே அரசு இலங்கை அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடத்துவதற்கு மாநகர சபை ஆதரவு வழங்க வேண்டும்" என்று அவர் தமது பிரேரணையில் தெரிவித்திருந்தார்.

இந்தப் பிரேரணையை எதிர்த்து ஈ.பி.டி.பி. உறுப்பினர் வைரமுத்து அன்ரன் சிவலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் எம்.மங்களநேசன், புளொட் உறுப்பினர்களான ம.தவநாதன், என். ஜெயச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

இதைத் தொடர்ந்து பிரேரணை கைவிடப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா

## சிங்களக் கிராமங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு!

வவுனியா,பெப்.25

வவுனியா மாவட்டத்தில் சிங்கள மக்கள் வசிக்கும் கிராமங்களின் பாதுகாப்பு கடந்த மாதம் முதல் பலப்படுத்தப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரியும், 211ஆவது படையணியின் தளபதியுமான பிரிகேடியர் திஸ்ஸ ஜெயவர்த்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகர மேயராக

## கந்தையனை நியமிப்பது குறித்து கூட்டணி விரைவில் முடிவு செய்யும்

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ். மாநகர சபை மேயராக செல்லன் கந்தையனை நியமனம் செய்வது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் முடிவு செய்யும் என்று யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் என்.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

1998ஆம் ஆண்டு நடத்தப்பட்ட யாழ். மாநகரசபைத் தேர்தலில் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் செல்லன் கந்தையனை யாழ். மாநகரசபை மேயராக நியமிப்பதாக தேர்தல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஒன்றுகூடுவதைத் தடுக்க வன்னியில் படை நடவடிக்கை

வவுனியா,பெப்.25

வன்னியில் விடுதலைப் புலிகள் ஒன்றுகூடுவதைத் தடுக்கும் வகையில் படையினர் திடீர் திடீரென மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று வன்னியில் நிலைகொண்டுள்ள 56ஆவது படையணியின் கட்டளை அதிகாரி கேணல் பி.கனேகொட தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டிருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அதிபர் ஒருவருக்கு உத்தரவு

நெல்லியடி,பெப்.25

கல்லூரி மாணவி ஒருவர் ஆசிரியரினால் அடித்துத் துன்புறுத்தப்பட்ட பின் கல்லூரியிலிருந்து விலக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மேற்படி கல்லூரி அதிபரை இம்மாதம் 28ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டுள்ளார்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் 5ஆம் ஆண்டில் கல்வி கற்கும் முனுசாமி அலங்கை (வயது 10) என்பவரே சம்பந்தப்பட்ட மாணவி ஆவார்.

கடந்த ஜனவரி 12ஆம்திகதி ஆசிரியர் ஒருவர் கல்லூரியில் வைத்து இவரை அடித்து துன்புறுத்தியதாக, இவரின் பெற்றோர் வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை நேற்றுமுன் தினம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில், நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

மாணவியை அடித்ததாகக் கூறப்படும் ஆசிரியர் ஒருவரை, சந்தேகத்தின் பேரில் வல்வெட்டித்துறை பொலீஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தபோதே கல்லூரியிலிருந்து மாணவியை நீக்கியமை தொடர்பான விளக்கம் அளிப்பதற்காக, இக்கல்லூரியின் அதிபரை எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறு, பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தவழக்கு விசாரணை அடுத்த மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியர் சார்பில் சட்டத்தரணி அ.க.நடராஜா ஆஜரானார். (இ-109)

# தாக்குதல் வழக்கு ஒன்றில் 5 பொலீஸாரும் விடுவிப்பு

நெல்லியடி,பெப்.25

வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்தில் வைத்து கடமை நேரத்தில் பொலீஸ்காரர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்த ஐந்து பொலீஸாரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த டிசெம்பர் 25ஆம்திகதி வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அங்கு கடமையிலிருந்த சுனில் பண்டார (வயது 30) என்ற பொலீஸ்காரர் இதே பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஐந்து பொலீஸாரினால் தாக்கப்பட்டிருந்தார் என்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணை இரண்டாவது தடவையாக நேற்றுக் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

குறித்த பொலீஸ்காரரை தாக்கியதாகக் கூறப்படும், ஐந்து பொலீஸாரையும், பருத்தித்துறை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் டபிள்யூ. சமரசேகரா நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்திருந்தார்.

குறித்த பொலீஸார் இச்சம்பவம் தொடர்பாக, தாம் மன்னிப்புக்கோரி, சமாதானமாகச் செல்ல விரும்புவதாக தெரிவித்ததையடுத்து இவர்களை எச்சரிக்கை செய்த பருத்தித்துறை மாவட்ட நீதிவான், குறித்த ஐவரும் தலா 250ரூபா வீதம் ஆயிரத்து 250 ரூபாவை நயினாதீவு நாகவிகாரைக்கு தர்மப்பணமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டு இவர்களை விடுதலை செய்தார்.

## தாவரவியல் பெயர்சூட்டும் நிகழ்வு

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பல்வேறு வகையான மரங்களுக்குமான "தாவரவியல் பெயர் சூட்டும்" நிகழ்வு இன்று காலை 9மணிக்கு பல்கலைக்கழக தாவரவியல் துறை முன்றலில் இடம்பெறும்.

துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இந்த நிகழ்வினை ஆரம்பித்து வைப்பார். (இ-7)

## மதுபோதையில் வந்தவருக்கு அபராதம் விதிப்பு

நெல்லியடி,பெப்.25

நீதிமன்றக் கட்டடத்தினுள் நீதிபதி பிரசன்னமாகியிருந்த சமயம், மதுபோதையில் உள் புகுந்து நீதிபதியையும், நீதிமன்றத்தையும் அவமதித்ததாகக் கூறப்படும் குடும்பஸ்தர் ஒருவரை 500 ரூபா அபராதம் செலுத்துமாறு, பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை 4மணியளவில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் நிகழ்ந்தது.

வல்வெட்டித்துறை மாவடியில் இரு சாராருக்கிடையே ஏற்பட்ட கைகலப்பு சம்பந்தமான வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை நடைபெற்ற சமயம்' அவர்களில் ஒருவரை, பிணை எடுப்பதற்காக, மதுபோதையில் வந்த வல்வெட்டித்துறை சமரபாகுவைச் சேர்ந்த ஒருவருக்கே குறித்த அபராதம் விதிக்கப்பட்டிருந்தது.

(இ-109)


**யா/இந்து மகளிர் கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

**முறைசாராப் பயிற்சிநெறிகள் - 2000**

1. சமையற்கலை
2. அலங்காரப் பொருள் உற்பத்தி

மேற்படி பயிற்சிநெறிகள் 01.03.2000 அன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. பயில விரும்புவோர் காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 29.02.2000

~ அதிபர்

(73970)



**யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கம் - வரைவுள்ளது**

**கூறுவிலை கோரல் - கட்டடப் பொருள்கள்**

இதன் கீழ் குறிப்பிடப்படும் கட்டடப் பொருள்களை இச்சங்க நடுவப்பணிமனையில் வழங்குவதற்கு கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகள் 01.03.2000ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்பாக நேரடியாகவோ, தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கப்படவேண்டும். 'கட்டடப் பொருள்களுக்கான கூறுவிலை' என கடித உறையின் இடது மூலையில் குறிப்பிட்டு 'பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கம், யாழ்ப்பாணம்' என முகவரியிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

(1) 5 நால் சல்லிக்கல்
(2) 1 அங்குல சல்லிக்கல்
(3) 9 " அத்திவாரக்கல்
(4) மண்கும்பான் மணல்
(5) நாகர்கோயில் மணல்
(6) கொட்டுமண்

– பொது முகாமையாளர்.

127, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
24.02.2000

(C/11175)



**MATHS CENTRE**

NELLIADY

A/L-2000

**வினா-விடை வகுப்பு**

தமிழ்
திரு. கமலரூபன
இந்துநாகரிகம்
திரு. ராஜேஸ்கண்ணன்

**ஆரம்பமாகிவிட்டது**

வடமராட்சியில் எமது நிறுவனத்தில் மட்டும் இவ்வகுப்புகள் நடைபெறும்.

(C/11158)



**ராஜா**
யாழ்ப்பாணம்
சரத்குமார், தேவயாணி
நடித்த
**சூரியவம்சம்**
காட்சிகள்
10.30 – 2.30
(C/11156)



**லிபேட்டி**
அச்சுவேலி
அனேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
M.R.ராதா, S.S.ராஜேந்திரன
நடித்த
**இரத்தக் கண்ணீர்**
காட்சிகள் 10.30, 2.30
T.P – 070 – 212223
070 – 212678
(73866)



**நாகம்ஸ்**
சுன்னாகம்
அர்ஜுன்,ரேவதி,
பிரகாஷ்ராஜ்,வடிவேலு
நடித்த
**சுபாஸ்**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11176)



**சமூகக்கல்வி தரம் 7**
புதிய பாடத்திற்கான
வினா விடை நூல்
**விலை ரூபா 35.00**
கிடைக்குமிடம்
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
ஆசிரியர்:
[illegible]
285, [illegible] வீதி,
(73971) திருநெல்வேலி.


## கண்ணீர் அஞ்சலி

தாதிய பயிற்சிப் பாடசாலை முன்னாள் அதிபர் திருமதி வல்லிபுரம் அவர்களின் பாசமிகு கணவரின் திடீர் மரணச் செய்தி கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

84AB பிரிவு பழைய மாணவர்கள்
தாதிய பயிற்சிப் பாடசாலை

(C/11180)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர்
(கணக்காய்வு)
திருமதி கோமளா திருநாவுக்கரசு
அவர்களின் அன்பு மகன்

### திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றோம். அவரது மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினரின் துயரலைகளில் நாமும் பங்கேற்று, கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

தலைவர், நெறியாளர்கள்,
பொது முகாமையாளர், பணியாளர்கள்,
வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
மருதங்கேணி,
தாளையடி.

உபயகதிர்காமம்,
புலோலி.

(73973)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர்
(கணக்காய்வு)
திருமதி கோமளா திருநாவுக்கரசு
அவர்களின் அன்பு மகன்

### திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். பாசமிகு புதல்வனின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

ப.நோ.கூ.சங்கம்,
சுன்னாகம்.

(C/11179)

# மரண அறிவித்தல்கள்

## செல்லர் நடராசா

(இராசதுரை)

இல.111, பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த செல்லர் நடராசா (இராசதுரை) அவர்கள் 19.02.2000 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2000) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.அற்புதச்சந்திரன்
(மருமகன்)

111, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(73972)

## செல்லையா கண்மணிப்பிள்ளை

வராத்துப்பளையை சேர்ந்த செல்லையா கண்மணிப்பிள்ளை அவர்கள் நேற்று (24.02.2000) வியாழக்கிழமை நண்பகல் காலமானார்.

அன்னார் வராத்துப்பளை காலஞ்சென்ற முறிவு வைத்தியர் க.செல்லையாவின் அன்பு மனைவியும் செ.புவனேந்திரம் அவர்களின் அன்பு தாயாரும் ரஜனியின் அருமை மாமியும் தேவகி, சுதன் (சுவிஸ்) தாரணி, சுதா, சுகிர்தன், சுஜிர்தன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2000) வெள்ளிக்கிழமை நண்பகல் 1.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
செ.புவனேந்திரம்
(மகன்)

புலோலி கிழக்கு,
வராத்துப்பளை.

(C/11181)

## நாகமுத்து கணபதிப்பிள்ளை

47, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட நாகமுத்து கணபதிப்பிள்ளை (22.02.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு, பாக்கியம், இராசம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரரும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் யோகம்மா, இராஜேஸ்வரி, பரிமளம், நாகேஸ்வரி (நோர்வே), தவராஜா (கனடா), கணேசலிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற இரஞ்சிதநீலா, யோகரத்தினம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வடிவேலு (ஓய்வுபெற்ற இ.போ.ச. ஊழியர்), விஜயரத்தினம் (சீ.கூட்டுத்தாபனம்), இராயப்பு (ப.தெ.வ.கூ.சங்கம்), ஐயாத்துரை (நோர்வே), ஜெயந்தினி (கனடா), தவானி (ஜேர்மனி), பூங்கோதை (கனடா) ஆகியோரின் மாமனாரும் அருள்நேசன் (கனடா), அருள்ரூபன் (நோர்வே), புஸ்பாஜினி, சுபாஜினி (கனடா), அருணோதயன், தக்சியா, யூஜின்சவுல் (கனடா), யூஜின்வளன், யூஜின்அஜித், ஜெனீபா, ஜெரின், யூஜின்லக்ஷன், யூஜின்நிக்ஷன், சிந்துஜா, சுஜீபன், கஜன், ஜிலக்சியா, திலக்ஷன், கோபிகா, தனுஷிகா, வினோஷன், விதுர்ஷன், மதுரிகா, மதுசிகா, இன்றிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெரோனின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2000) சனிக்கிழமை காலை 10.30 (புதிய நேரம்) மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மா.விஜயரத்தினம்
(மருமகன்)

33/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(73977)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடத்தனையைச் சேர்ந்த மூவரை
# யாழ். சிறையில் வைக்க உத்தரவு

நெல்லியடி, பெப். 25
பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதாகி அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குடத்தனையைச் சேர்ந்த மூவர் கடந்த திங்கள் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இவர்களை மார்ச் மாதம் 16 ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த வருடம், ஒக்ரோபர் மாதம், 19 ஆம் திகதி குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை செந்தூரன் (வயது 25), ஐயாத்துரை பாஸ்கரன் (வயது 28), ஆனந்தராஜா அருள்தாஸ் (வயது 30) ஆகிய மூவரும் பருத்தித்துறை 524 பிரிகேட் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் மூவரும் பின்னர் காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் இது வரை காலமும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

வழக்கு விசாரணை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் எடுக்கப்பட்ட சமயம் அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து அழைத்து வரப்பட்ட இவர்களை காங்கேசன்துறைபயங்கரவாதத்தடுப்புப் பிரிவின் உபபொறுப்பதிகாரி எல். ஹேரத் நீதிமன்றில் ஆஜர் செய்தார்.

இவர்களது வழக்கு விசாரணைக்கு சட்டமா அதிபரின் பணிப்புரை தேவைப்படுவதனால் மார்ச் மாதம் 16 ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார். (ஐ-109)

## இளைஞர் கொள்கை ஒன்றை உருவாக்க அரசு திட்டம்

யாழ்ப்பாணம், பெப். 25
இலங்கைக்கான இளைஞர் கொள்கை ஒன்றினை உருவாக்குவதற்கான கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளை பிரதேச, மாகாண மட்டங்களில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் திரட்டி வருகிறது.

யாழ். மாவட்டத்திலும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்டக் காரியாலயத்தினால் இந்த விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

மார்ச் 7 ஆம் திகதி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் இது தொடர்பான அமர்வு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த அமர்வில் துறை சார்ந்த நிபுணர்கள், உயர் அதிகாரிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், புத்திஜீவிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின்பிரதிநிதிகள், அரசியற் கட்சிப் பிரதிநிதிகள் வைத்தியர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்,

இளைஞர் கொள்கை தொடர்பாக இந்தச் செயலமர்வில் திரட்டப்படும் கருத்துக்கள் தொகுக்கப்பட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமைச் செயலகம் ஊடாக மார்ச் 15 ஆம் திகதி இளைஞர் விவகார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும் என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

மட்டக்களப்பு, வவுனியா பகுதிகளில் இது தொடர்பான செயலமர்வுகள் நடைபெற்றுள்ளதுடன் திருகோணமலையிலும் இந்தச் செயலமர்வை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## ஜனாதிபதி ஆட்சி முறையை வரவேற்கிறது முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு, பெப். 25
''நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையில் உள்ள நன்மைகளைக் கருத்திற் கொண்டு அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.''

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இவ்வாறு ஐ. தே. க. விடம் கோரி உள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவருமான ராவூப் ஹக்கீம் இந்தக் கோரிக்கையை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

ஒரு நாட்டின் தலைவர் மக்களினால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும். முழு நிர்வாகத்துக்கும் அவரே பொறுப்பாக இருக்க வேண்டும்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஐ தே. க. தனது ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

என்றும் ஹக்கீம் மேலும் கூறினார். (உ-6)

## கணவனை இழந்த பெண்கள் விவரம் சேகரிக்க நடவடிக்கை

நவாலி, பெப். 25
வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் தற்போதைய சூழ்நிலையில் கணவனை இழந்த பெண்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்கச் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனவே பொருத்தமானவர்கள் மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்பதாக சகல ஆவணங்களுடனும்சண்டிலிப்பாய்ப்பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-100)

## கந்தரோடைப் பகுதியில் உள்ள சிறு குளங்கள் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு, பெப். 25
பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் ஆதரவுடன் கந்தரோடைக் கிராமத்தில் உள்ள சிறு குளங்களைப் புனரமைப்பது பற்றிய கலந்துரையாடல் கந்தரோடை ஞானவைரவர் சனசமூக நிலையத்தில் சமீபத்தில் நடைபெற்றது.

கந்தரோடை கிராமசேவையாளர் க. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சிறு குளங்களைப் புனரமைப்பதில் சமூகத்தின் பங்களிப்பு, நீர் முகாமைத்துவம், புதிய இன விதை நெல் என்பன பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது இப்பகுதியில் காணப்படும் குண்டுக்குளம், வாய்க்கால்கள் என்பனவற்றைப்புனரமைப்பு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் திட்டமிடல் உத்தியோகத்தர் சர்வானந்தம், பொறியியலாளர் மாலினி, வெளிக்கள உத்தியோகத்தர் இராஜேந்திரன் மற்றும் அதன் பிரதிநிதிகள், உடுவில் பிரிவு விவசாய போதனாசிரியர், விவசாய சம்மேளன பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

புதிய இன விதை நெல்லை பெற்றுத் தருமாறு விவசாயிகள் விடுத்த கோரிக்கையை பட்டினிக்கெதிரான நிறுவனத்தினர் ஏற்றுக்கொண்டனர். (இ-152)

## நற்சிந்தனை வகுப்புகள்

யாழ்ப்பாணம், பெப். 25
காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சிவதொண்டன் நிலையத்தில் நாளை சனிக்கிழமை முதல் ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களிலும் காலை 8 மணி முதல் 12 மணிவரை யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை தொடர்பான வகுப்புக்கள் நடைபெற உள்ளன. (உ-6)

## யாழ். நகரப் பகுதியில் கழிவகற்றும் திட்டம்

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ். நகரில் கழிவுப் பொருள்களை அகற்றுவது தொடர்பான திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ. நா. அபிவிருத்தித்திட்டம் மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஐ. நா. அபிவிருத்தித்திட்டப் பணிமனையில் அண்மையில் நடைபெற்றது.

யாழ். நகர்ப் பகுதியில் கழிவுப்பொருள்கள் அதிகமாகக் காணப்படும் இடங்களான குருநகர், பஸ் நிலையம் உட்பட நகரின் மத்திய பகுதிகளிலேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தைத் தயாரித்து விரைவில் தமக்கு வழங்குமாறு யாழ். மாநகர சபையிடம் ஐ நா. அபிவிருத்தித்திட்டம் கோரியுள்ளது.

## டிப்ளோமா விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப். 25
புதிய கல்வி ஆண்டுக்கான தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமாவுக்குரிய விண்ணப்பங்களை நாளைக்கு முன்னர் யாழ் இந்துக் கல்லூரி நிலையத்தில் ஒப்படைக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த. வில்வநாதன் கேட்டுள்ளார். (உ-10)

## இலக்கியச் சந்திப்பு

சுன்னாகம், பெப். 25
தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடத்தும் இலக்கியச் சந்திப்பு எதிர்வரும் ஞாயிறன்று காலை 10 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்னிந்தியப் பயணம் மேற்கொண்டு நாடு திரும்பியுள்ள மூதறிஞர் சொக்கனுடனான இந்தச் சந்திப்பில் ''தென்னிந்தியப் பயணம்; உணர்வும் வியப்பும்'' என்னும் பொருளில் தனது மன அனுபவங்களைச் சொக்கன் பகிர்ந்துகொள்வார். (இ-27)

## முறைசாராக் கல்விப் பயிற்சி

வடமராட்சி வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவினால் இரண்டாயிரமாம் ஆண்டுக்கான முறைசாராக் கல்விப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

ஆங்கிலச் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும், உடையமைத்தல், துணி அச்சிடல், மோட்டோர் பொறி திருத்துதல், மின் ஒட்டுவேலை, மின்சார இலத்திரனியல், மரப்பொருள் வடிவமைத்தல் போன்ற பயிற்சி நெறிகள் அளிக்கப்பட உள்ளன.

மார்ச் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பமாகும் இந்தப் பயிற்சி நெறியைப் பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (இ-15)

## தேர் ஓடும் பாதை விஸ்தரிப்பு

சுழிபுரம் - பறாளை சிவசுப்பிரமணியசுவாமி தேர் ஓடும் வயல் வீதி விஸ்தரிக்கப்பட்டு திருத்த வேலைகள் நடைபெற உள்ளன. வயல் சொந்தக்காரர்கள் தாமாகவே முன்வந்து தேர் ஓடும் பாதைக்கு வேண்டிய நிலத்தை வழங்கியுள்ளனர். வீதியின் மேற்கு, வடக்குப் பக்கம் உள்ள வயல் நிலங்கள் நன்கு அகலமாக்கப்பட்டு செப்பனிடப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை ஆலய தர்மகர்த்தா சபையினர் செய்து வருகின்றனர். (இ-28)

## எமது சமூகத்தின் சுகநிலை தாழ்ந்துகொண்டுபோகிறது

### கவலை தெரிவிக்கிறார் சுகாதார சேவைப் பணிப்பாளர்

அச்சுவேலி, பெப் 25
''வைத்திய சாலைகளின் வளவசதிகள் பெருகிக் கொண்டு செல்லும் அதே வேளையில் நோயாளர்களின் எண்ணிக்கையும் நாளந்தம் அதிகரித்து வருகிறது. இதனை அவதானிக்கும்போது எமது சமூகத்தின் சுகநிலை மிகவும் தாழ்ந்து கொண்டு போகின்றது என்பது தெளிவாகின்றது. இந்த நிலை வரவேற்கத் தக்கது அல்ல. நோயற்ற சுகமான சமூகத்தை உருவாக்க சமூக முன்னோடிகள் முன்வந்துஉழைக்க வேண்டும்''

இவ்வாறு கூறினார் சுகாதாரசேவைகள் பிரதி மாகாணப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி உமா சிவபாதசுந்தரம்.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதிகளின் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரை நிகழ்த்தினார்.

அவர் மேலும் பேசியதாவது:-

எமது பிராந்தியத்தில் சுக வாழ்வு நிலை குன்றி நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இந்த நிலை வரவேற்கத் தக்கது அல்ல. வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களில் பெரும்பாலானவர்கள் சாதாரண [illegible] தொழிலாளர்களின் உடல நலம் பாதிக்கப்படுமானால் எமது பொருளாதார வளங்கள் எல்லாம் பாதிக்கப்படும். எமது மக்கள் நோயற்ற சுக வாழ்வு வாழவேண்டும் என்பதே சுகாதார சேவைகளின் அடிப்படை நோக்கம்.

யாழ். மாவட்ட வைத்திய சாலைகளில் வைத்தியர் பற்றாக்குறை பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. இங்கே கற்றவர்கள் தமது உறவுகளுக்குச் சேவை செய்யாது ஒதுங்கும் நிலை தொடருகின்றது.

வைத்தியசாலைக்கான கட்டடம், கருவி சாதனங்கள் மருந்து வள வசதிகள் ஆகியவை வந்து சேர்ந்தாலும் வைத்தியர் பற்றாக்குறை ஈடு செய்ய முடியாத இடைவெளியாக உள்ளது. இது எமது சக்திக்கு அப்பாற்பட்டதாக காணப்படுகின்றது.

மக்கள் இந்த நிலையைக் கருத்திற் கொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தமது பிரதேசங்களில் இருக்கும். வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற முயல வேண்டும். நகர்ப்புற வைத்தியசாலைகளுக்குச் செல்லும் மனோபாவத்தை மாற்றிக் கொள்ளவேண்டும்.

தமது பிரதேசத்தில் இருக்கும் வைத்திய நிலையங்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு உதவுகின்ற மனோபாவம் வரவேற்கத்தக்கது. சிறந்த சேவையை வழங்குவதற்கு சுகாதாரத் திணைக்களம் தயாராக உள்ளது. அதற்கு மக்களும் தமது ஒத்துழைப்பை வழங்கி உதவ வேண்டும் — என்றார்.

வடக்கு—கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் ஏ, சி. செபநாயகம் உரையாற்றும்போது வடக்கு — கிழக்கு ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் இந்தப் பிரதேசத்தின் மக்கள் தமது தேவைகளை நிறைவுசெய்யக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது மன நிறைவைத் தருகின்றது.

நியாயமான தேவைகளை கவனத்துக்குக் கொண்டு வந்தால் நிறைவு செய்வது எனது கடமை—என்றார்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் தலைவர் க. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில், புதிய பெண்கள் விடுதியை சுகாதார சேவைகள் பிரதிமாகாணப் பணிப்பாளர் டாக்டர் செல்வி உ. சிவபாதசுந்தரம் திறந்து வைத்தார்.

புதியநிர்வாகப் பிரிவுக் கட்டடத்தை பிராந்திய ஆணையாளர் ஏ.சி. செபநாயகமும் பற்சிகிச்சைப் பிரிவை சாவகச்சேரி பிரதேச செயலர் சுந்தரம் பிள்ளையும் புனரமைக்கப்பட்ட ஆண்கள் விடுதியை கட்டடத்திணைக்கள பிரதம பொறியியலாளர் என். சுந்தரமூர்த்தியும் திறந்துவைத்தனர். (இ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

6 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும்
2000 ஆம் ஆண்டுக்கான
நிர்வாகசபைத் தெரிவும்

இடம்:- தலைமைச் செயலகம்,
317, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

காலம்:- 26 – 02 – 2000 (சனிக்கிழமை)

நேரம்:- மு. ப. 11. 00 மணி
(பழைய நேரம்)

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

– மாவட்ட செயலாளர்.

(சி/11163)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
02 — 07 — 1956



ஆண்டவன் அடியில்
08 — 04 — 1999

### அமரர் செல்லப்பா சண்முகரத்தினம்

திதி: 24–02–2000

எங்கள் குல தெய்வமே!
எம்மை ஆளாக்க அல்லும் பகலும்
அயராது பாடுபட்டு எங்களை
ஆறாத்துயரில் விட்டுப் பிரிந்து ஆண்டவன்
அடி சேர்ந்து ஆண்டொன்றானாலும்
உங்கள் அன்பு முகம் என்றும்
எம்மை விட்டகலாது.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்,
சகோதரன், சகோதரி.

மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில்,
மானிப்பாய்.

(73754)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
20 — 04 — 1931



மறைவு
28 — 01 — 2000

### அமரர் தணிகாசலம் செல்லத்துரைசாமி

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்)

28–01–2000 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியை அன்னாரின் இல்லத்தில் 27–02–2000 அன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெற்று அவரது அஸ்தி வல்வை ஊறணி தீர்த்தக்கரையில் கலக்கப்படும் என்பதைத் தெரிவித்து அதில் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

செ. சிரோன்மணி (மனைவி),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(73[illegible])


# மருத்துவபீட இறுதி ஆண்டுப்பரீட்சை:
# சித்திபெற்ற66 பேரின் பெயர்விவரம்

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட இறுதியாண்டுப் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 66 பேர் சித்தி அடைந்துள்ளனர். இவர்களில் 2 பேர் இரண்டாம் வகுப்பில் உயர் தரத்திலும் 11 பேர் இரண்டாம் வகுப்பில் கீழ்ப் பிரிவிலும் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த 66 பேரின் விவரம் வருமாறு:-

**2ஆம்வகுப்புஉயர்தரம்**

★ எஸ். கண்ணன், ரி. சிவகுமார்,

**2 ஆம்வகுப்பு கீழ் பிரிவு**

★ பி. பாஸ்கரன், பி.பிரிற்றோன்,செல்வி.ஆர். ஜசந்தா செல்வி எஸ். கல்யாணி பி. சுகுமார், செல்வி எஸ். மீரா, செல்வி எம். மிர்ணா, பி. சதீசன், என்.ஸ்ரீசரவண பவானந்தன், செல்வி சி. தர்மினி, செல்வி ரி. தியாசினி,

**சாதாரணசித்தி**

எஸ். அச்சுதன், செல்வி ஈ. அனுசியா, செல்வி பி. அனிந்திதா, திருமதி பி. அருள்மொழி வி. அருள்தாசன், செல்வி பி. பாலினி, செல்வி வி. பவானி. செல்வி எஸ். தயாளினி செல்வி கே, கீதா, செல்வி எஸ். கௌசலா,

செல்வி எஸ்.கலைச்செல்வி, செல்வி எஸ். கல்யாணி, செல்வி. எஸ். கவுசலா, ஏ. கிருஸ்னேந்திரன்,எம். குகராசா, கே. லிங்கநாதன்.

செல்வி ஐ. பெலிசியா மலர்விழி, செல்வி எம். மலர்விழி, கே. மாதவன். எஸ். நகுலேஸ்வரன்' கே. நந்தகுமாரன், செல்வி கே. நிவேதா, செல்வி ரி. பகீரதி, செல்வி வி. பிரேமினி, எஸ். ரமேஸ்குமார், செல்வி ஆர், ரதிதேவி, செல்வி ரி.சசிகலா. எஸ். சத்தியதாசன், வி. சக்திவேல்.

செல்வி எஸ். சிவகௌரி, செல்வி எஸ். சிவாஜினி, செல்வி ஏ. சிவரூபி. எஸ். சிவசுதன், செல்வி எஸ். சௌதாமினி, செல்வி ஆர். சுனிதா, ஆர். சுரேஸ், வி. திரியம்பகன், செல்வி கே. தாரணி, செல்வி ரி. திருத்தேவி.

கே. திருமாவலவன், எம். உமாகாந்தன், ரி. விக்னராஜா, திருமதி எஸ். விஜிதா, திருமதி ஆர். யசோதா, ரி. பிரதாபன், செல்வி கே. யமுனா, ஜி. அருள்ராஜன்,

செல்வி கே. ஜெயந்தி, கே. மனோறஞ்சன், செல்வி ஆர். பிரேமளா, பி. வினுகாந்தன், திருமதி கே. ரூபகாந்தி, செல்வி கே. தயா. (இ-10)

## வசதி குறைந்த 234 பேருக்கு இலவச கண்ணாடி வில்லைகள்

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரின் ஆதரவில் மேற்கொள்ளப்பட்ட கண் பரிசோதனை முகாம்களில் கண்ணாடி போடவேண்டிய தேவை ஏற்பட்ட 234 வசதிகுறைந்த மக்களுக்கு லயன்ஸ் கழகத்தினரால் இலவசமாகக் கண்ணாடி வில்லைகள் வழங்கப்பட்டன.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரின் தேவைகளுக்கென கொழும்பு கிராண்ட்பாஸ் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் எம். டபிள்யூ. இராயசிங்கம் 350 கண்ணாடி வில்லைகளை இலவசமாக அனுப்பி வைத்திருந்தார்.

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையில் வைத்து இளவாலை,உடுவில், (மல்வம்) மானிப்பாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த வறியவர்களுக்கு கண்ணாடி வில்லைகள் வழங்கப்பட்டன.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகச்செயற்றிட்டத்தலைவர் லயன் எஸ். எஸ். தங்கராசாவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற பேராசிரியர் எஸ். ஏ. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இன்றைய கஷ்டமான சூழ்நிலையிலும் கூட மக்களுக்கு சேவை செய்ய வேணடும் என்ற நல்ல நோக்கோடு கஷ்டப்பட்டு கண்ணாடி வில்லைகளைத் தருவித்து வழங்கிய மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினரின் சேவையை அவர் பாராட்டினார்.

இளவாலையைச் சேர்ந்த 91பேருக்கும்,மானிப்பாயைச் 51 பேருக்கும், உடுவில்— சேர்ந்த மல்வத்தை சேர்ந்த 92 பேருக்கும் கண்ணாடி வில்லைகள் வழங்கப்பட்டன.

(இ-152)

## நான்கு பாடசாலைகளுக்கு கல்வி உபகரணங்கள், நூல்கள்

யாழ்ப்பாணம், பெப். 25
ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் வடமராட்சிகல்வி வலயத்தைச் சேர்ந்த நான்கு பாடசாலைகளுக்கு கல்வி உபகரணங்கள். நூல்கள் என்பன இன்று வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளன.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் சிறுவர் நூல் நிலையத்துக்கென சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்து நூல்களும் —

கரவெட்டி, துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்துக்கென உலகப்படம், பூகோளம் என்பனவும் —

கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியில் தரம் 6 இல் கல்வி கற்கும் 5 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் —

அல்வாய் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் இந்த ஆண்டு முதல்தவணை ஆரம்பமான ஜனவரி 3 ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 14 ஆம் திகதி வரையும் அதிக நாள்கள் பாடசாலைக்கு வருகை தந்த 17 மாணவர்களுக்கு புத்தகப் பையும் — வழங்கப்பட உள்ளன.

மேற்குறிப்பிட்ட பொருள்களை பாடசாலை அதிபர்களிடம் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். சிவராசா சேவாச்சிரமத்தின் சார்பில் கையளிப்பார்.

(இ-10)

## கல்வி வலயத்துக்கு கட்டடம்

வடமராட்சி கல்வி வலயத்துக்கென புலோலி மெ. மி. தமிழ் வித்தியாலயத்தில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடம் இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஒதுக்கீடு செய்திருந்த ஒன்பதரை லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட இந்தக் கட்டடத்தில் வலயத்தின் நிதிப் பிரிவு, கட்டடப் பிரிவு என்பன இயங்கும் என வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்தார்.

(க-173-118)

## நூறாவது வயதில் மூதாட்டி மரணம்

தென்மராட்சி, பெப். 25
பளைப்பிரதேசத்தில் கூடிய வயதுடைய மூதாட்டி ஒருவர் தனது நூறாவது வயதில் காலடி வைக்க முன்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மரணமானார்.

1901 பெப்ரவரி 21 ஆம் திகதி பிறந்த முகமாலை சுடலைப்பிட்டி என்னும் இடத்தைச் சேர்ந்த கந்தையா சின்னம்மா என்பவரே நூறாவது வயதில் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னர் மரணமானவர் ஆவார்.

பளைப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்டு வந்த முதியோர் தினவிழாக்களில் இந்த மூதாட்டியே பளைப் பிரதேசத்தில் ஆகக்கூடிய வயதுடையவர் என கௌரவிக்கப்பட்டு வந்தார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் எட்டாம் திகதி பளையில் நடத்தப்பட்ட முதியோர் தினவிழாவுக்கு இவர் முகமாலையிலிருந்து தனியாக வந்து [illegible] டது.

(இ-117)


## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்று தற்போது யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களை ஒன்று கூடுமாறு அழைக்கின்றோம்.

இடம்:- யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு
(யாழ். போதனா வைத்தியசாலை முன்)

காலம்:– 03-03-2000 வெள்ளி பி.ப.3.00 (புதிய நேரம்)

**யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவரும் தற்போது யாழ். பல்கலைக்கழக மாணவரும்**

(73947)



## அந்தியேட்டி அழைப்பு

### அமரர் சின்னக்குட்டி குண்டுமணி

நாளை(26• 02– 2000) சனிக்கிழமை காலை7.00 மணியளவில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்

கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(73933)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் ஒரு பயங்கரவாத நாடு என அமெரிக்கா மீண்டும் அறிவிப்பு

தெஹ்ரான், பெப். 25
ஈரான் தொடர்ந்து பயங்கரவாத நாடாகவே இருந்து வருகின்றது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈரானிய நாடாளுமன்றத் தேர்தல்களில் சீர்திருத்தவாதிகள் பெரும் வெற்றி பெற்றுள்ள இந்த வேளையில் அமெரிக்காவின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது மிக முக்கியமானது என்று அவதானிகள் கூறியுள்ளனர்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சு நேற்று விடுத்த அறிவிப்பு ஒன்றில் —

ஈரான் பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் ஒரு நாடு என்றே அமெரிக்கா இன்னமும் கருதி வருகின்றது என்றும் —

அந்த நாட்டை பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் வைத்திருப்பதை நியாயப்படுத்தக் கூடிய கணிசமான விவகாரங்கள் அமெரிக்காவிடம் உள்ளன என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியப் புரட்சியின் பின் ஈரான் இஸ்லாமியப் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவு வழங்கி வருகின்றது எனத் தெரிவித்துப் பல ஆண்டுகளுக்கு முன்னர் அந்த நாட்டைப் பயங்கரவாத நாடாக அமெரிக்கா அறிவித்தது.

ஈரானின் தற்போதைய அதிபர் முஹமட் கதாமியின் சீர்திருத்தக் கொள்கைகளை அடுத்தும்—

அண்மையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல்களின் மூலம் சீர்திருத்தவாதிகள் நாடாளுமன்றத்தைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்திருப்பதை அடுத்தும் —

ஈரான் மீதான அமெரிக்காவின் கருத்தில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் அமெரிக்காவின் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. (6-9)

## உலக அரங்கில்

## நேட்டோ மிட்ரோவிக்காவில் படைகளைக் குவிக்கின்றது

பெல்கிரேட், பெப். 25
கொசோவோவின் பதற்றம் நிலவும் மாவட்டமான மிட்ரோவிக்காவில் நேட்டோ தனது படைகளைக் குவித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அல்பேனியர்களும் சேர்பியர்களும் பெருமளவில் வாழும் மிட்ரோவிக்காவில் அண்மையில் அல்பேனியர்கள் சிலர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தும் —

அல்பேனிய இனத்தவர்கள் சேர்பியர்கள் அதிகம் வசிக்கும் பகுதிக்குள் நுழைய முயன்றதை அடுத்து ஏற்பட்ட பதற்றம் காரணமாகவும்—

நேட்டோ அமைப்பு மிட்ரோவிக்காவில் அமைதிப் படையினரைக் குவித்து வருவதாகக் கூறப்பட்டது.

நகரில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் எனின் அதிகளவு சமாதானப்படையினரை கடமையில் ஈடுபடுத்த வேண்டி உள்ளது என்று நேட்டோப்படை அதிகாரி ஒருவர் கூறினார். (6-9)

# நைஜீரிய மதக் கலவரங்களில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழப்பு

லண்டன், பெப். 25
நைஜீரியாவின் வடக்கு நகரான கடுனா நகரில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் தொடரும் கலவரங்கள் காரணமாக நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

சடுனாவில் இஸ்லாமிய ஷரியாத் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அங்குள்ள முஸ்லிம்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் கடந்த திங்களன்று நகரில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போதே கலவரம் மூண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. தொடரும் இந்தக் கலவரங்களில் நூற்றுக்கும் அதிகமான கிறிஸ்தவ, முஸ்லிம் மக்கள் உயிரிழந்தனர். மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

கலவரக்காரர்கள் கத்திகள், பொல்லுகள், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட குண்டுகள் ஆகியவற்றைக் கொண்டு வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அங்கு பதற்ற நிலை காணப்படுவதாகவும் பொதுமக்கள் பீதியடைந்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

கலவரக்காரர்களை அடக்குவதற்காக நைஜீரிய அரசு கடுனாவுக்கு மேலதிக படைகளை அனுப்பி வைத்துள்ளது. வீதிகளில் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். தற்போது நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் அங்கு தொடர்ந்து பெரும் பதற்றம் நிலவி வருவதாகச் சுயாதீன செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-6-9)


உ

## பருத்தித்துறை கொட்டடிப்பிள்ளையார் பெரிய பிள்ளையார்

## வருடாந்த மகோற்சவ விழா

காலம்: 26-02-2000 சனிக்கிழமை

பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமாகி 10 தினங்கள் காலை, மாலை நடைபெறும்.

மகோற்சவ குரு சிவப்பிரம்மஸ்ரீ
**ராம்-கெங்காதரக் குருக்கள்**
சாரதாபீடம், அல்லையம்பதி.

அனைவரும் வந்து அருள் பெறுக.

**ஆலய பரிபாலன சபை.**

(73962)



## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி கோமளா திருநாவுக்கரசு அவர்களின் சிரேஷ்ட புதல்வனும்,
யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவனுமாகிய

## திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகால மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவரது தாங்கொணா இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களும் நலன்புரிச் சங்க உறுப்பினர்களும், கூட்டுறவு அலுவலகம், யாழ்ப்பாணம்.**

(சி/11172)


## வழக்கு விசாரணை தொடர்பான

# நவாஸ் ஷெரிப்பின் குறிப்புகள் சிறையிலிருந்து திருடப்பட்டன!

இஸ்லாமாபாத், பெப். 25
பாகிஸ்தானில் பதவியில் இருந்து கவிழ்க்கப்பட்ட பிரதமர் நவாஸ் ஷெரிப் தனது வழக்கு விசாரணைகள் தொடர்பாக எழுதிய குறிப்புகள் திருடப்பட்டு விட்டன என்று அவரது வழக்கறிஞர்கள் நீதிமன்றில் குற்றம் சாட்டி உள்ளனர்.

கராச்சி பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றில் நவாஸ் ஷெரிப் மற்றும் 6 பேர்மீதான விசாரணைகள் நேற்று இடம்பெற்ற போது வழக்கறிஞர்கள் இந்தக் குற்றச்சாட்டை நீதிபதியிடம் தெரிவித்தனர்.

நவாஸ் ஷெரிப்பும் அவருடன் சேர்த்துக் குற்றம் சாட்டப்பட்ட மற்றைய 6 பேரும் தமது சிறை அறையில் வைத்திருந்த வழக்குத் தொடர்பான ஆவணங்கள் மற்றும் குறிப்புகள் அனைத்தும் திருடப்பட்டுள்ளன என்றும் அவர்கள் கூறினர்.

பாகிஸ்தானின் தற்போதைய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் பயணம் செய்த விமானத்தைக் கடத்த முயன்றது, அவரைக் கொலை செய்ய சதி முயற்சியில் ஈடுபட்டமை, தேசத்துரோகம் ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காக நவாஸ் ஷெரிப் மீதும் அவரது 6 சகாக்கள் மீதும் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றமை தெரிந்ததே. (6-9)

# நீதிமன்ற விசாரணைகளை பினோசே எதிர் நோக்கலாம்

## ஸ்பெயின், சுவிஸ் மருத்துவர்கள் தெரிவிப்பு

சிலி, பெப். 25
சிலியின் முன்னாள் சர்வாதிகாரி ஜெனரல் பினோசேயின் உடல் நிலை நீதிமன்றில் தோன்றி வழக்கு விசாரணைகளை எதிர்நோக்கக் கூடிய நிலையில் உள்ளது என்று ஸ்பெயின் மற்றும் சுவிற்சர்லாந்து நாடுகளின் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

வழக்கு விசாரணைகளை எதிர்நோக்கக் கூடிய நிலையில் அவரது உடல்நிலை இல்லை என்பதால் அவரை விடுவிக்கப் போவதாக பிரிட்டிஷ் அரசு அண்மையில் அறிவித்திருந்தது.

இதனை அடுத்து பினோசேயின் உடல்நிலை குறித்த அறிக்கையை உடன் வெளியிட வேண்டும் என்று லண்டன் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கை குறித்து கருத்து வெளியிட்ட பெல்ஜியம் நாட்டு நீதிபதி டொமியென்வொலோன் மியே நீதிமன்றில் ஆஜராக பினோசேயின் தற்போதைய உடல் நிலை போதுமானது என்று கூறி உள்ளார். (6-9)

# அணுஆயுதங்களை ரஷ்யா தான் முதலில் பயன்படுத்தாது

## புதிய இராணுவக் கொள்கை குறித்து விளக்கம்

மொஸ்கோ, பெப். 25
எந்த ஒரு நாட்டுக்கு எதிராகவும் ரஷ்யா முதலில் அணு ஆயுதங்களைப் பிரயோகிக்காது. ஆனால் நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் நிலையில் அதனைப் பயன்படுத்தவும் ரஷ்யா தயங்காது.

ரஷ்யாவின் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியான செக் இவான்னோவ் இவ்வாறு தெரிவித்தார். ரஷ்யாவின் புதிய இராணுவக் கொள்கை குறித்துக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

புதிய இராணுவக் கொள்கை அணு ஆயுதப் பயன்பாடு தொடர்பாகத் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. அத்துடன் அது ஓரளவு சமாதானத்தை நேசிக்கும் திட்டமாகவும் உள்ளது என்று அவர் மேலும் சொன்னார்.

இந்தப் புதிய கொள்கை ரஷ்யப் பாதுகாப்புச் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனினும் அது தொடர்பான முழுமையான விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

தற்போதைய பதில் அதிபர் விளாடிமிர் புடின் இந்தக் கொள்கையை அடுத்த மாதம் அங்கீகரிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-6-9)

# பாகிஸ்தானுக்குச் சென்றால் கிளின்ரன் உயிருக்கு ஆபத்து!

## அமெரிக்க உளவுத்துறை அஞ்சுகின்றதாம்

வாஷிங்ரன், பெப். 25
அமெரிக்கஅதிபர் கிளின்ரன் அடுத்த மாதம் மேற்கொள்ள உள்ள இந்தியா உள்ளிட்ட தெற்காசியப் பிராந்தியத்துக்கான விஜயத்தின்போது அவர் பாகிஸ்தானுக்குச்சென்றால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று அமெரிக்க உளவுத்துறை அஞ்சுவதாக வாஷிங்ரன் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானின் பாதுகாப்புத் துறையில் அமெரிக்காவுக்கு எதிரான பலர் இருப்பதாக வாஷிங்ரனில் உளவுத்துறை உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதை ஆதாரமாகக் கொண்டு ''வாஷிங்ரன் ரைம்ஸ்'' இச்செய்தியை வெளியிட்டுள்ளது. [illegible] பட்ட பயங்கரவாதிகள் உலகெங்கும் இருந்து செயற்படுவதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம்—

கிளின்ரன் தனது தெற்காசிய விஜயத்தின் போது பாகிஸ்தானுக்கும் செல்வார் என வெளியான செய்திகளை அமெரிக்க அரசு மறுத்துள்ளது. இது குறித்து கிளின்ரன் இன்னமும் முடிவு செய்யவில்லை என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஜோன் லோபாட் கூறினார். (உ-6-9


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் தொண்டர் ஆசிரியையாகக் கடமை புரியும்
செல்வி சுகந்தி அவர்களின் அன்புத் தந்தையார்

## கிட்டினராஜா

அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் கழகம்
**யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக்கல்லூரி.**
புத்தூர்.

(73967)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெளியிடங்களுக்குச் செல்வதற்கான

## பாதுகாப்பு அனுமதியின் கால எல்லை;

# ஒரு வருடகாலம் நீடிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ். மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்குச் செல்பவர்களுக்குவழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தினை ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் வகையில் கால எல்லையை நீடிக்க வேண்டும்.

இவ்வாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு யாழ். சிவில் நிர்வாக அதிகாரி பிரிகேடியர் ரி. ஈ திலகரத்தினாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கோரியுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்திலிருந்து வெளியே செல்லும் ஒருவர் கிராம சேவைஅலுவலர், பிரதேச செயலர் ஆகியோரின் சிபார்சுடன் தமது பகுதி இராணுவ பிரிகேட் அதிகாரி ஆகியோரின் அனுமதி பெற்றே வெளியே செல்ல முடிகின்றது.

இவ்வாறு அனுமதி பெற்றுச் சென்று திரும்பி வந்த பின் மீண்டும் வெளியிடத்துக்கு செல்லவேண்டிய தேவை ஏற்படின் திரும்பவும் போக்குவரத்து அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டியுள்ளது.

இதனால் வீணான அலைச்சல்களும், காலதாமதமும் ஏற்படுகின்றன. எனவே இந்த அனுமதிப்பத்திரத்தினை ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் வகையில் வழங்கினால் பொதுமக்களுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

மேலும் யாழ்ப்பாணத்தில் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தினை வைத்திருப்பவர்கள் வெளியிடங்களிலும் அதனைப் பயன்படுத்தி பாதுகாப்பு கெடுபிடிகளிலிருந்து மீள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

— இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-5)

## விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ். குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 24 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு.

**சாவகச்சேரி**

(126198ஏ). (126198பி),
(129825ஏ), (129825பி),
(131249ஏ), (131400ஏ),
(131413ஏ), (131413பி),
(131413சி). (131429ஏ),
(125476ஏ), (125476பி),
(125476சி), (131890ஏ),
(131890பி), (131899ஏ),

**நெடுந்தீவு**

(12103ஏ), (12103பி),
(12506ஏ), (12796ஏ).
(12796பி), (12823ஏ),
(12879ஏ), (12901ஏ),

**யாழ்ப்பாணம்**

(122818ஏ). 122818பி),
(122818சி), (122818டி),
(130244ஏ), (130422ஏ),
(130422பி). (130458ஏ),
(130473ஏ). (13051ஏ),
(13051பி), (132111ஏ),
(132120ஏ), (132179ஏ),
(132179பி), (132183ஏ).
(132186ஏ), (132186பி),
(132186சி), (132186டி).
(132204ஏ), (132204பி),
(132204சி), (132421ஏ),
(133428ஏ), (133705ஏ),
(133705பி),
[136891ஏ]. [136916ஏ],
[136916பி], [136922ஏ],
[136958ஏ], [136962ஏ],
[136962பி], [136971ஏ].
[136971பி], [136971சி],
[136974ஏ], [136974பி],
[136994ஏ], [136994பி],
[136994சி], [136998ஏ],
[136998பி], [137001ஏ],
[137001பி], [137001சி],
[137009ஏ], [137026ஏ],
[137026பி], [137026சி],
[137026டி], [137026ஈ],
[137051ஏ]. [137051பி],
[137051சி], [137069ஏ],
[137071ஏ]. [137071பி],
[137071சி], [137073ஏ],
(137073பி), (137073சி),
(137106ஏ), (137111ஏ),
(137134ஏ), (137147ஏ),
(137182ஏ), (137182பி),
(137182சி), (137213ஏ),
(137214ஏ), (137218ஏ).
(137219ஏ), (137220ஏ),
(137221ஏ), (137225ஏ),
(137232ஏ), (137232பி),
(137237ஏ), (137251ஏ),
(137266ஏ), (137294ஏ),
(137333ஏ), (137333பி).

**கரவெட்டி**

(137638ஏ), (137638பி),
(137638சி)

**ஊர்காவற்றுறை**

[12394 ஏ], [12394 பி],
[12394 சி], [12394டி],
[12466 ஏ], [12673 ஏ],
[12673 பி], [12725 ஏ].
[12736 பி[, [12774 ஏ],
[12789 ஏ]. [12798 ஏ],
[12798 பி]. [12798 சி],
[12810 ஏ], [12816 ஏ],
[12816 பி], [12816 சி],
[12816 டி], [12816 ஈ],
[12816 எப்], [12816 ஜி],
[12816 எச்], [12816 ஐ],
[12816 ஜே], [12824 ஏ],
[12826 ஏ]. [12839 ஏ],
[11839 பி], [12843 ஏ],
[12843 பி], [12844 ஏ],
[12850 பி], [12850 சி],
[12850 டி], [12850 ஈ].
[12852 ஏ],
(12855ஏ), (12860ஏ),
(12865ஏ), (12868ஏ),
(12871ஏ), (12873ஏ),
(12873பி), (12874ஏ),
(12874பி), (12886ஏ),
(12889ஏ), (12889சி),
(12889எப்), (12892ஏ).
(12893ஏ), (12896ஏ).

**நல்லூர்**

(136109ஏ). (136109பி)
(136109சி), (137041ஏ),
(131854ஏ). (135598ஏ),
(135598பி), (135605ஏ),
(135705ஏ), (135708ஏ),
(135708பி). (135736ஏ),
(135736பி), (135736சி),
(135807ஏ).

**பளை**

(131887ஏ), (131792ஏ),
(131896ஏ) (131896பி),
(131904ஏ), (131904பி),

**பருத்தித்துறை**

135214ஏ), (135214பி),

**உடுவில்**

(135944ஏ), (135949ஏ),
(138151ஏ),

**வேலணை**

(12557ஏ), (12721ஏ),
(12730ஏ), (12730பி),
(12731ஏ), (12731பி),
(12779ஏ), (12779பி),
(12791ஏ). (12792ஏ),
(12792பி). (12792சி),
(12804ஏ), (12804பி),
(12804சி), (12804டி),
(12804ஈ), [12805ஏ],
[12806ஏ]. [12806பி].
[12806சி], [12806டி),
[12806ஈ], (12825ஏ),
[12827ஏ], (12828ஏ),
(12828பி), (12830ஏ),
(12832ஏ), [12833ஏ],
(12834ஏ), (12834பி),
(12834சி).
(12835 ஏ), (12840 ஏ),
(12840 பி), (12840 சி),
(12841 பி), (12846 ஏ),
(12847 ஏ), (12847 பி),
(12848 ஏ), (12853 ஏ),
(12853 பி), (12853 சி),
(12854 ஏ), (12872 ஏ),
(12872 பி). (12876 ஏ),
(12876 பி), (12876 சி),
(12876 டி). (1288[illegible]),
(12891 ஏ), (12894 ஏ).
(12895 ஏ). (12902 ஏ)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் உள்ள அதிபர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப் படவுள்ளன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடமராட்சி வலய கல்வித் திணைக்களம் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இம்மாதம் 29 ஆம் திகதி விண்ணப்ப முடிவு திகதியாகும். (க-173)

## வீதி திருத்தம்

நல்லூர், வைமன் வீதியை திருத்தும் பணிகள் யாழ். மாநகரசபையால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குண்டும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதிவீதித் தடை அமைக்கப்பட்டு திருத்தப்படுகிறது. (6-51)

## புத்தாயிரமாண்டு கலை நிகழ்வு

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் புத்தாயிரமாம் ஆண்டு கலை நிகழ்வு நாளை சனிக்கிழமை பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் தலைமையில் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் பண்டிதர் க. சச்சிதானந்தம் கலந்து கொள்வார்.

நிகழ்வில் இசையரங்கு, நாட்டியம்'' நாடகம்'' இன்னிசை அரங்கு ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. [6-15]

## கட்டுடையில் தொழில் நிலையம்

கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கம் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தும்பிலிருந்து கயிறு திரித்தல், தும்புத்தடி, விளக்குமாறு செய்தல், விபூதி தயாரித்தல் ஆகிய பல்வேறு தொழில்களை உள்ளடக்கிய தொழில் நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதென்று தீர்மானித்துள்ளது.

உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருள்களை கொண்டு இந்தத் தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இதனால் பலருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்குமென்றும் சங்கத் தலைவர் சி.பொ.வ.ம.க. முதல்வியார் தெரிவித்தார். (6-135)




## வெற்றி தோல்வி இன்றி முடிந்த இலங்கை - பாக். ஆட்டம்

கொழும்பு, பெப். 25
இலங்கை அணிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அணிக்கும் இடையில் நடைபெற்று வந்த மூன்று நாள் பயிற்சி ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமான இந்த ஆட்டத்தில் முதலில் இலங்கை அணி துடுப்பெடுத்து ஆடி தனது முதல் இன்னிங்ஸில் 278 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அணித்தலைவர் சனத் ஜெயசூரிய 58 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 60 ஓட்டங்களை அடித்தார். அணியின் உபதலைவர் மகில ஜெயவர்த்தன 39 ஓட்டங்களை அடித்தார். இலங்கை டெஸ்ட் அணியில் மீள இடம் பெற்றிருந்த அணியின் முன்னாள் தலைவர் ரணதுங்க 47 ஓட்டங்களையும், முன்னாள் உபதலைவர் அரவிந்த டி சில்வா ஒரு ஓட்டத்தையும் பெற்றனர். முகமட் அக்ரம் 4 விக்கெட்டுக்களையும், பசிட் 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்து ஆடிய பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அணி தனது முதல் இன்னிங்ஸில் 290 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. வஸ்தி 85 ஓட்டங்களையும், நவீஸ் 62 ஓட்டங்களையும், லடீவ் 56 ஓட்டங்களையும் அடித்தனர். நுவான் சொய்ஸா 3 விக்கெட்டுக்களையும் ரவீந்திர புஸ்பகுமார 4 விக்கெட்டுக்களையும், ரங்கனஹேரத் 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி ஆட்ட நேர இறுதியில் 4 விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றது. ஆர்னல்ட் 39 ஓட்டங்களையும், ஜெயசூரிய 26 ஓட்டங்களையும், அர்ஜுன ரணதுங்க ஆட்டமிழக்காமல் 86 ஓட்டங்களையும், அரவிந்த ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை — பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட்ஆட்டம்நாளை 26 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும். (இ-8)

## போட்டி அட்டவணை மாற்றம்

கொழும்பு, பெப். 25
ஐ நா. ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச கிரிக்கெட் வாரத்தை முன்னிட்டு மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுலா மேற்கொள்ள இருந்த ஸிம்பாப்வே, பாகிஸ்தான் அணிகளின் போட்டி அட்டவணையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கிரிக்கெட் வாரத்தின் முக்கிய அம்சமாக இடம்பெற உள்ள, ஆசியத் தெரிவு அணிக்கும் உலகத்தெரிவு அணிக்கும் இடையில் இடம்பெற உள்ள போட்டிகளில் மேற்குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்த அணி வீரர்கள் பங்குபற்றுவதாலேயே இந்த மாற்றம் செய்யப்பட்டு உள்ளது.

புதிய அட்டவணையின் படி மேற்கிந்திய தீவுகள் — ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் மார்ச் 16 முதல் 20 வரையிலும், இரண்டாவது டெஸ்ட் மார்ச் 24 முதல் 28 வரையிலும், நடைபெறும். பாகிஸ்தான், ஸிம்பாப்வே, மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புக் கிரிக்கெட் போட்டித் தொடர் ஏப்ரல் 1முதல் 23 வரை நடைபெறும்.

பாக். — மே. தீவுகள் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டித்தொடரில், முதல் டெஸ்ட் மே 5 முதல் 9 வரையிலும், இரண்டாவதுடெஸ்ட் மே 18 முதல் 22வரையிலும், மே 25 முதல் 29 வரையிலும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம், பெப். 25
பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி யாழ். இந்துக் கல்லூரி அணியுடன் மோதும். இந்த ஆட்டம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (இ-8)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 25
வேலணைக் கோட்ட மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் நாளை சனிக்கிழமை இடம்பெற உள்ள கிரிக்கெட் ஆட்டத்தில் நயினாதீவு ஸ்ரீ கணேசா மகாவித்தியாலய அணியும் நயினாதீவு மகா வித்தியாலய அணியும் நயினாதீவு மகா வித்தியாலய மைதானத்தில் மோத உள்ளன. (இ-8)

## 50 ஓட்டங்களால் ஆஸி. வெற்றி!

வெலிங்டன், பெப். 25
ஆஸ்திரேலிய-நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் நியூஸிலாந்தில் நடைபெற்று வரும் ஒரு நாள் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 50 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 310 ஓட்டங்களைப் பெற்றது. அடம் கில்க்றிஸ்ட், மைக்கல் பெவன், மார்க்வோ ஆகியோர் அரைச்சதங்களை விளாசி அடித்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணியினது ஆரம்பத்துடுப்பாட்டம் ஒரு பரபரப்பை ஏற்படுத்திய போதும் முடிவு ஆஸி. அணிக்கு சாதகமாகவே அமைந்தது. ஆஸி அணியின் அதிவேகப் பந்துவீச்சாளர்களானமக்ரா, பிறட்-லீ, பிளமிங் ஆகியோர் வீசிய பந்துகளை ஆளுங்காள் விளாசியடித்து அஸ்ட்லேயும் டுவெஸும் அரைச்சதம் அடித்தனர். ஆனாலும் தொடர்ச்சியாக இலக்குகள் சரிந்ததால் 44 ஓவர்களில் 260 ஓட்டங்களுக்குள் நியூஸிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஆட்ட நாயகனாக அடம் கில்க்றிஸ்ட் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்த ஒருநாள் ஆட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## வட அயர்லாந்து ஒரு பாடம்

முறிந்து போன வட அயர்லாந்து சமாதான முயற்சிகளை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகள் வெற்றி அளிக்கும் சாத்தியம் பெரும்பாலும் குறைவாகவே காணப்படுகிறது.

வட அயர்லாந்தில் கத்தோலிக்க மக்களுக்காகப் போராடும் ஐ. ஆர். ஏ. எனப்படும் ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதங்களைக் கையளிக்க மறுத்ததே ஒப்பந்தம் தோல்வி அடைவதற்குக் காரணம் ஆகும். ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதங்களைக் கையளிக்க எப்பொழுது முன்வருகிறதோ அப்பொழுது ஒப்பந்தம் மீண்டும் உயிர்பெற்றுவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சமாதானமுயற்சிகள்தோல்வி அடைந்து போனதும் ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதங்களைக் கையளிக்க மறுப்புத் தெரிவித்திருப்பதும் மிகவும் துரதிர்ஷ்டம் வாய்ந்தவை.

இலங்கை போன்ற சிறுபான்மை, பெரும்பான்மைப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் நாடுகளுக்கு வட அயர்லாந்து ஒப்பந்தம் ஓர் உதாரணமாகக் கடந்த காலங்களில் காட்டப்பட்டுவந்தது. இதே அடிப்படையில் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஒப்பந்தம் தோல்வி அடைந்தது பெரும் ஏமாற்றமே.

ஒப்பந்தம் தோல்வி அடைந்தது, இலங்கை இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்ய முன்வந்திருக்கும் நோர்வே நாட்டுக்கு ஒரு முன் எச்சரிக்கை என்றே கூறவேண்டும். அதாவது எந்த ஓர் ஒப்பந்தமும் சிறுபான்மையினரின் நம்பிக்கையை முழு அளவில் பெற்றால் மட்டுமே வெற்றி பெற முடியும்.

ஐரிஷ் குடியரசு இராணுவம் பல ஆண்டு காலமாக வட அயர்லாந்தில் உள்ள சிறுபான்மை கத்தோலிக்க மக்களுக்காகப் போராடி வருகிறது. ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் முக்கிய பலம் ஆயுதமே.

வட அயர்லாந்துப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற எண்ணத்தைப் பெரும்பான்மைப் புரட்டஸ்தாந்து மக்களுக்கும் பிரிட்டனுக்கும் ஏற்படுத்தியதே இந்த ஆயுதப் போராட்டம் தான்.

ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர் ஏமாற்றப்பட்டு விட்டால் மீண்டும் போராட்டத்தை முன்னெடுக்க பல தசாப்தங்கள் செல்லலாம். கடந்த காலத் தியாகங்களும் அர்த்தமற்றவையாகி விடும். இப்படியான நிலைமை ஏற்கனவே இருந்து வரும் அற்ப, சொற்ப உரிமைகளையும் பறித்துவிடும்.

ஆகவே ஐரிஷ் குடியரசு இராணுவம் கண்மூடித்தனமாக ஆயுதங்களை ஒப்படைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஒப்பந்தம் என்ற பெயரில் தமது உரிமைகளுக்காகப் போராடுபவர்களை ஏமாற்ற நினைப்பது அவர்களைப் பலவீனமாக்குவது போன்ற உத்திகள் ஒருபோதும் சமாதானத்துக்கு உதவமாட்டா.

வட அயர்லாந்து சமாதான ஒப்பந்தத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதற்குத் தற்பொழுது ஒரு மார்க்கம் மட்டுமே இருக்கிறது. அதாவது சிறுபான்மை கத்தோலிக்க மக்களின் நம்பிக்கையைப் பெரும்பான்மைப் புரட்டஸ்தாந்து மக்கள் பெற வேண்டும். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் கட்டி எழுப்பப்படும் ஒப்பந்தமே வெற்றி பெறும்.

# நம்பிக்கை நிறைந்த பிரார்த்தனை ஆன்ம ஈடேற்றத்தைத் தரும்

ஞானக் கதிர்

க. சிவசங்கரநாதன்

மனிதனாகப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் பாக்கியசாலிகளே! ஏனெனில் இந்தமனிதப்பிறவியில் மாத்திரமே 'பகுத்தறிவு' எனப்படும் ஆறாம் அறிவு மானுடன் விளங்குகின்றது. இறை தியானம் செய்வதற்கு இது ஓர் ஏற்ற தகுதியான பிறவியாகும்.

வாழ்க்கையில் 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்று நம் முன்னோர் வகைப்படுத்திச் சென்றிருக்கின்றார்கள். அதை நாம் கவனத்திற் கொண்டு நம் வாழ்க்கையை நெறிப்படுத்த வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் பெற்றுக்கொண்ட அரும் பெரும் பொக்கிஷம்தியானம். இந்தத் தியானத்தின் மூலம் இறைவனைக் காணலாம்.

ஆன்ம ஈடேற்றத்துக்குப் பிரார்த்தனையே சிறந்தவழி. மனம் ஒரு குரங்கு. அதைப் புலன் வழி செல்ல விடாமல அடக்குவதற்கு இது ஒரு நல்ல சாதனம். பிரார்த்தனையின் மூலம் மன அமைதியும் நிம்மதியும் சாந்தியும் கிடைக்கும்.

பிரார்த்தனை என்றால் நேர்த்திக்கடன் என்றும் பொருள். பிரார்த்தனைக்கும் தெய்வ சிந்தனையை உந்தும் பூஜை, வழிபாடு, பக்திஜபம், ஆராதனை என்பவற்றுக்கும் ஓர் அடிப்படை வித்தியாசம் உண்டு.

பிரார்த்தனைக்கு ஒருகுறிப்பிட்ட தெய்வமோ ஆலயமோ மகானோ தேவை இல்லை. நேர்த்தியானது, குறிக்கோள்களுடன் செய்யும் தெய்வ மணங்கமழும் சிறந்த முயற்சியேயானாலும் குறுகிய நோக்கத்தில் செய்யப்படுவதாகும். ஆனால் பிரார்த்தனை கடலைப்போல் பரந்து விரிந்தது; ஆகாயத்தைப் போல் உயர்ந்தது.

பூஜைக்குப் பூ; ஜபத்துக்கு துளசிமாலை; வழிபாட்டுக்கு ஓர் ஆலயம்; ஆராதனைக்கு தெய்வம்; ஆனால் பிரார்த்தனைக்கு எதுவும் வேண்டாம்; நல்ல மனம் மட்டும் இறை நம்பிக்கையுடன் இருந்தாற் போதும்.

மௌனம் பிரார்த்தனையின் சாரம். உண்மையான பிரார்த்தனை மௌனத்திலே பிறக்கவேண்டும்; மௌனத்திலே மலரவேண்டும். மௌனம் சக்தியைப் பெருக்குகிறது; சாந்தியைக் கொடுக்கிறது. கடவுளுக்கு வியாக்கியானமே மௌனம் தான் என்று வேதமே கூறுகிறது.

உண்மையான பிரார்த்தனை வார்த்தைக்கு அப்பாற்பட்டது. அது மௌனமாய்த் திகழ்வது. அங்கே கேட்பவனும் இல்லை; கொடுப்பவனும் இல்லை; வாங்குபவனும் இல்லை; அது சர்வமும் அடங்கிய நிலை; பேசாமல் இருந்தால் மட்டும் மௌனமாகிவிடாது; நினைக்காதும் இருக்கவேண்டும்.

யோகிகள், ஞானிகள், சித்தர்கள் ஆகியோர் சிந்தனையை அடக்கச் சும்மாயிருக்கும் நிலையைக் காட்டிச் சென்றுள்ளார்கள். "சும்மாயிரு சொல்லற என்றலுமே அம்மா பொருளொன்றும் அறிந்திலனே" என்ற அருணகிரியாரின் அனுபூதிப் பாடல் இதனை வலியுறுத்துகின்றது.

கோயிலுக்குப் போய் வருவதாய் வைத்துக் கொள்வோம். கண்களை மூடிக் கொண்டு நம் இல்லத்திலிருந்து கோயில்சென்று சுவாமி தரிசனம் செய்து வீடு திரும்பும் வரை நிகழ்கின்ற அனைத்து நிகழ்வுகளையும் எண்ணுகின்றோம். தொடர்ச்சியாக மனக்கண் முன் சினிமாத் திரையிலே சம்பவங்களைக் காண்பதைப் போல பார்த்துக்கொண்டே போவதாக மனதில் உருவகம் செய்யவேண்டும்.

ஆனால் பிரார்த்தனைக்கு எதுவும் வேண்டாம்; நல்ல மனம்தான் வேண்டும் என்று சொல்லிவிட்டுகண்களைமூடிக் கொண்டு ஆலயத்துக்குச் செல்லச் சொல்லுவது வியப்பைத் தரலாம்.

அதேவேளை — மனத்தை ஒருவழிப்படுத்தி இறைவனை நினைத்து — ஆலயத்திற்குச் சென்று சுற்றி வழிபடும்போது அதில் லயித்து விடுகிறோம். ஆன்மா லயப்படும் இடமே ஆலயம். நந்தனார்கதையைப் படிக்கும் போது அவரது நிலையை உணரலாம்.

நம்மோடு ஒட்டிக்கொண்டிருக்கின்ற அகங்காரம் பிரார்த்தனை மூலம் மறைந்து விடுகிறது. இதனை உணர வைப்பதற்கும் மன அமைதியும் ஆன்மீகப் பண்பும் ஏற்பட இறை வழிபாடும் பிரார்த்தனையும் அவசியம். இதனை நாம் உணர்ந்து நடந்தால் பிரார்த்தனையின்மூலம் நல்ல பலனை அடையலாம். ★

# வன்னிக்கான போக்குவரத்தில் மக்கள் படும் இன்னல்கள் ஏராளம்!

## வீரம், தீரம் செறிந்த பயணமாக மாறிவிட்டது

செய்தி மடல்

வவுனியாவிலிருந்து இளவரசன்

வன்னிக்கு—அதாவது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குமான போக்குவரத்தானது அம்புலிமாமா புத்தகத்திலே வரும் கதைகளில் அரக்கனின் உயிரை எடுப்பது போன்ற வீரம், தீரம் செறிந்த பயணமாகி விட்டது. முன்னர் போல் புறப்பட்டோமா, போனோமா, வந்தோமா என்றில்லாமல் இப்போது இடிபட்டு, நெரிபட்டு, அடிபட்டு, உதைபட்டு, இரத்தக்காயங்களுடன் தான் வவுனியாவுக்கு வந்து சேர வேண்டியுள்ளது.

வன்னியைப் பொறுத்தவரை போர்க்கோஷம் நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்டு பின்னர் புலிகளால் மீட்கப்பட்ட பகுதியான மடு, பெரியமடு, தட்சணா மருதமடு போன்ற பகுதிகள் தற்போது எவரது கட்டுப்பாட்டிலுமில்லாத ஒரு பகுதியாகவே உள்ளன. இராணுவம் பின்வாங்கிச் சென்ற பின்பும் புலிகள் இந்தப் பகுதிக்கு வரவுமில்லை அவர்களது நிர்வாகத்தை அமுல்படுத்தவும் இல்லை.

### லொறிகளில் பயணம்

இந்த நிலையில் வவுனியா செல்வதற்காக வருவோர் பள்ளமடுப் பகுதியில் வைத்து பாஸ் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உணவுப்பொருள்களை ஏற்றி வரும் லொறிகளில் ஏற்றி அனுப்பப்படுகின்றனர். அனுப்பப்படுவோர் லொறிகளில் வந்து பிரமனாளங்குளம் பகுதியில் இறக்கி விடப்படுகின்றனர். முன்னர் புதுக்குடியிருப்பு, மல்லாவி பகுதிகளிலிருந்தெல்லாம் மடுவுக்கும் ஏனைய அதனை அண்டிய பகுதிகளுக்குமிடையில் பஸ் சேவைகள் நடைபெற்றன. ஆனால் இப்போது புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பள்ளமடுவுடன் பஸ் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுவிடும்.

அங்கிருக்கும் புலிகளின் இறுதிச் சோதனைச் சாவடியில் வவுனியாவுக்குப் போகிறவர்களாயின் பாஸைக் கொடுத்துவிட்டு செல்ல வேண்டும் மற்றும்ஏனைய தேவைகளுக்காக மடுவுக்கும் மற்றைய ஏனைய இராணுவத்தின் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிக்குள் போக வேண்டியவர்கள்தமது அடையாள அட்டையை பள்ளமடுவில் கொடுத்துவிட்டுப் போக வேண்டும்.

இந்த நிலையில் [illegible] மீற்றர் தூரமுள்ள பகுதியை லொறிகள் மூலம் கடந்து பிரமனாளங்குளம் பகுதியைவந்தடையும் மக்கள் அங்கே செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமை வரை காத்திருக்க வேண்டும். ஏனென்றால் அந்த நாள்களில்தான் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினரின் உதவியோடு மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எடுக்கப்படுவர். எனவே வந்து சேர்ந்தவர்கள் மடுவிலும் தம்பனைப் பகுதியிலும் மர நிழல்களிலும் கோயில்களிலும் தங்கியிருக்க வேண்டும்.

### குழந்தைகளுடன் மக்கள் படும் கஷ்டம்

தற்போதைய குளிர் காரணமாகவும்அடிக்கடி கொட்டும் மழையிலும் கூனிக்குறுகி குழந்தைகளுடன் மக்கள் படும் அவலங்கள் பரிதாபகரமாக இருக்கும். இந்த மக்களுக்காக அந்தப்பகுதிகளில் புதுப்புது சாப்பாட்டுக் கடைகள் உருவாகியுள்ளன. மற்றும்படி வீடுகளிலும் நேரத்துடன் ஓடர் கொடுத்தால் செய்து கொடுக்கிறார்களாம்.

ஆனால் சுத்தம் சுகாதாரம் பற்றிப் பார்க்கப்போனால் பட்டினிதான் கிடக்க வேண்டும். விலையும் அப்படி இப்படித்தான். இவ்வளவு கஷ்டத்தின் பின் மக்களை எடுக்கும் நாள் கிட்டுகிறது. அப்போது காத்திருக்கும் மக்கள் மத்தியில் ஒரு பதற்றமும் பரபரப்பும் வந்துவிடும்.

ஏனென்றால் செவ்வாயோ வெள்ளியோ மக்களை எடுக்கும் நாள்களில் எத்தனை பேர் காத்திருந்தாலும் 500 பேர் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படுவர். இதனால் மேலும் அங்கே இருந்து அல்லல்படுவதைவிட அடிபிடிப்பட்டாவது போய்ச் சேர்ந்துவிடுவோம் என்றநிலையில் எப்படியாவது போய்விட வேண்டுமென்ற உறுதியினால் அந்தக் காட்டுப் பகுதிக்குள் இரவோடிரவாக வந்து கியூவிலே காத்திருக்கிறார்கள் மக்கள்.

இராணுவ வேலிக்கு முன்பாக உள்ள பகுதியில் மறுநாள் காலையில் உள்ளே அனுமதிக்கப்படுவதற்காக முதல் நாள் இரவு 7மணிக்கே கியூவிலே இருக்க வேண்டியுள்ளது. இராணுவத்தினரின் துப்பாக்கி முனைகள் அந்தப் பக்கமாகவே பார்த்துக் கொண்டிருக்க மேல் புறத்திலிருந்து ஷெல் வருமோ, ஹெலி, விமானம் ஏதும் வந்து

(11 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை**

மாசி 14

**சனிக்கிழமை**

திதி: ஸப்தமி

முன்னிரவு 11.01 வரை.

நட்சத்திரம்: விசாகம்

பிற்பகல் 2.39 வரை.

சுபநேரம்: 3.29 – 5.59

ராகுகாலம்: 9.29 – 10.59

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

பலரைச் சிலகாலமும், சிலரைப் பல காலமும் ஏமாற்றலாம்! ஆனால், எல்லோரையும் எக்காலமும் ஏமாற்ற இயலாது.

-ஆபிரகாம் லிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

ஆனந்தராசா கபிலஸ் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (812162560- 0904022203) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் விலாசத்துக்கு அனுப்பி உதவவும். சங்கானை தெற்கு, சங்கானை அல்லது வைத்திருப்போர் தயவு செய்து விலாசத்தை அறியத் தரவும். (73950)

கட்டைப்பிராயைச் சேர்ந்த மயில்வாகனம் நந்தீஸ்வரன் என்பவரது தேசிய அ.அ. (இல. 651930901V), விசேட அ. அ., தொழில் அ. அ. என்பன சிறு தொகைப்பணத்துடன் கைதடி சித்த மருத்துவத் துறையிலிருந்து கோப்பாய் வீதி வழியே கட்டைப்பிராய் வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கைதடி சித்த மருத்துவத்துறை அல்லது கொம்பியூட்டர் சயன்ஸ் அக்கடமி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (சி/11167)

வட்டு - வடக்கு சித்தன் கேணி என்னும் முகவரியைச் சேர்ந்த அரியகுட்டி வீரசிங்கம் என்பவரது தேசிய அ. அட்டை (472893548V) விசேட அ. அட்டை இரண்டும் 31-01-2000 அன்று யாழ். ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வெஸ்கோ பார்மஸி (யாழ் மருந்தகம்) 470 (250). ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (73927)

## விற்பனைக்கு

சனி, ஞாயிறு தினங்களில் நல்ல இன பூங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. பாக்கியநாதன், 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (73917)

2 Hero பெண்கள் துவிச்சக்கர வண்டி, G.E.C குளிர்சாதனப் பெட்டி, Singer தையல் இயந்திரம், மின் விசிறி மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. ஞாயிறு (27-02-2000) காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு: செல்லையா, இந்திரன், இல. 37 (77), கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (73955)

## கண்டெடுக்கப்பட்டது

கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தில் தவறவிடப்பட்ட பல்கலைக்கழக கல்வி தொடர்புடையனவும், புத்தளத்தில் பிரதி எடுக்கப்பட்ட நிழற் படங்களும் என்னிடம் கைவசமுள்ளன. தயவுசெய்து தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்புகளுக்கு: திருமதி ஆலாலசுந்தரம் மக்கள் வங்கி, கன்னாதிட்டி. (73935)

# சிறுவர் உளவளர்ச்சி கருத்தரங்கு

வலி. தென்மேற்கு, பெப். 25

நவாலி சென்ற் பீற்றர்ஸ் பாடசாலையில் இன்று நண்பகல் 'சிறுவர் உளவளர்ச்சி' தொடர்பான கருத்தரங்கு இடம் பெறும்.

இந்தக்கருத்தரங்கில் பாடசாலை அதிபர் சிறில் சுகந்திரன், உளவளத்துணையாளர்களான ஆர். இராஜேந்திரன், செ. ரமேஷ், செ. சதானந்தன், ஜோசப்பாலா ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரையாற்றுவர். (618-6)

## பெரியா மொழி ஜோதிடம்

தொழில் பிரச்சினை, கல்வித்தடை, விவாகத்தடை தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சாதகத்துடன் வரவும். ஞாயிற்றுக் கிழமைகளில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சனி, செவ்வாய்க் கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும் சந்திக்கலாம். (73943)

## சோதிடம்

கணனி மூலம் தமிழில் ஜாதகங்களை துல்லியமாக கணிப்பதற்கும் பலனை அறிவதற்கும் எண் சோதிடம் பார்ப்பதற்கும் பிறந்த நேரம் திகதி, ஊர், பெயர் இவற்றுடன் தொடர்பு கொள்ளும் முகவரி: க. குருபாலநந்தக்குருக்கள் பருத்தித்துறை வீதி, கிராம்புவில், சாவகச்சேரி T P, FAX 070-212300 (73928)

## இறைச்சிக் கோழி

நிறை கூடிய இறைச்சிக் கோழி (Broiler) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மட்டும் தொடர்பு: கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. (73953)

# காணி விற்பனைக்கு

சுதுமலையில் தாவடி மானிப்பாய் வீதிக்கு அண்மையில் 35 பரப்புடைய பலன் தரும் காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

ப. சுந்தரலிங்கம்
"பசுபதாபதி"
சுதுமலை மத்தி, மானிப்பாய்

[73956]

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

திருமதி கோ. திருநாவுக்கரசு அவர்களின் பாசமிகு மைந்தன்

## திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

பணிப்பாளர் சபை, பணியாளர்கள், அங்கத்துவ சங்கங்கள்.
வலி. ப. தெ. வள அபி கூ. ச. கொத்தணி
மானிப்பாய்.

(சி/11173)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

திருமதி கோமளா திருநாவுக்கரசு அவர்களின் பாசமிகு மகன்

## திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு மிக்கத் துயருறுகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு சுதர்சனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அங்கத்தவர்கள், பணியாளர்கள், பணிப்பாளர்கள்.
தெல். ப. தெ. வள அபி. கூ. சங்கம்.

8 ஆம் கட்டை வீதி,
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை. (73966)

# கண்ணீர் அஞ்சலி

திருநெல்வேலி

திரு. செ. திருநாவுக்கரசு.
திருமதி கோமளா திருநாவுக்கரசு
கூ. அ. உ. ஆணையாளர் (கணக்காய்வு), யாழ்ப்பாணம்.

அவர்களின் புதல்வன்

## செல்வன் சுதர்சன்

அவர்களின் அகால மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகிறோம். அருமைப் புதல்வனை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பணியாளர்.
தெல்லிப்பழை,
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை. (சி/11168)

## சிறிய விவசாயிகளுக்கு

# நெல் சூடடிப்பதற்கு புதிய வகை இயந்திரம்

வலி. வடக்கு, பெப். 25

யாழ். மாவட்ட கமத்தொழில் சேவைகள் திணைக்களம் நெல் சூடடிப்பதற்கு புதிய வகை இயந்திரம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

மனித வலுவைப் பயன்படுத்தி இயக்கப்படும் இந்த இயந்திரம் சிறிய அளவிலான நெல் செய்கையாளர்களுக்கு பெரும் பயன்பாடு உடையதாகக் காணப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி, கைதடி, புத்தூர், உரும்பிராய், கீரிமலை ஆகிய கமத்தொழில் சேவைகள் நிலையங்களுக்கு இச்சூடடிக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வெகு விரைவில் இந்த இயந்திரங்களை ஏனைய கமத்தொழில் சேவைகள் நிலையங்களுக்கும் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-86)

# சிகிச்சை முகாம்

சுதுமலை, பெப். 25

சங்கானை, பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை சிகிச்சை முகாம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த சிகிச்சை முகாமுக்கு யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து வைத்தியர்கள் அடங்கிய மருத்துவகுழு செல்லவுள்ளது.

இந்தச் சிகிச்சை முகாமில் பல தரப்பட்ட வைத்திய சிகிச்சைகள் நடைபெறவுள்ளன.

குறிப்பாக பற்சிகிச்சை, குழந்தைகளுக்கான சிகிச்சை சத்திரசிகிச்சை என்பன நடைபெறவுள்ளன. (க-139)

# மரண அறிவித்தல்கள்

## சிங்காரம் வல்லிபுரம்
(சட்டத்தரணி)

பிரபல சட்டத்தரணி சிங்காரம் வல்லிபுரம், 23-02-2000 புதன்கிழமை காலமானார்.

அன்னார் நவமணி வல்லிபுரம் (முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் தாதிமார் பயிற்சிப் பாடசாலை) அவர்களின் அன்புக்கணவரும் நிரஞ்சனா, சத்தியேந்திரா, யமுனா, காஞ்சனா, நிமலேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன், அனோஜி, அன்ட்ரியாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், அகல்யா, விரேன், அனிஷா, நிக்கலஸ், ஜோசுவா ஆகியோரின் அன்புப் பாட்டனும் காலஞ்சென்ற லச்சுமியம்மா, வேதநாயகி, மகேஸ்வரி, நேசம்மா, சிறீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் வல்லிபுரம், கந்தையா, சிவஞானம், காலஞ்சென்ற வைரவநாதன். தவமணி கனகசபை, மனோன்மணி வேலாயுதபிள்ளை, பொன்னம்பலம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை காலை இல. 68, டேவிட்சன் றோட், பம்பலப்பிட்டி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக அவரின் பூதவுடல் கனத்தை இந்துமயானத்துக்கு 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி. சிறிஸ்கந்தராஜா,
(சகோதரன்)

68, டேவிட்சன் றோட்,
பம்பலப்பிட்டி,
Tel. 590838 (சி/11169)

## பண்டிதர் நல்லதம்பி கந்தையா

மீசாலை கிழக்கைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் [கிளி/இந்துக் கல்லூரி] அவர்கள் 23.02.2000 அன்று காலமாகிவிட்டார்.

இவர் தெய்வானைப்பிள்ளை [ஓய்வு பெற்ற ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் ம. வி.] அவர்களின் அன்புத் துணைவரும். முருகசோதி, சிவசோதி, கலாசோதி [கனடா], நவசோதி]கனடா], தவசோதி, [கனடா], பரம்சோதி, ஐங்கரன், [கனடா], அருட்சோதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், குலேந்திரம் [கிளை முகாமையாளர் சாவ/ப. நோ. கூ. சங்கம்], பத்மநாதன் [கனடா] மகாரஞ்சிதகுமார் [கனடா], குமாரதாஸ் [விற்பனையாளர் சாவ/ப. நோ. கூ. சங்கம்], ரஞ்சனா [கனடா], முருகதாஸ் [விற்பனையாளர் சாவ/ப. நோ. கூ. சங்கம்] ஆகியோரின் மாமனாரும், ஜனகன் [யாழ். தொ. நு. கல்லூரி மாணவன்], ஜனார்த்தனி [சாவ/ இந்துக் கல்லூரி மாணவி], தாரங்கன் [கனடா], தயாகரன் [கனடா] ஆரபி [கனடா], கஜந் (கனடா), சஹானா[கனடா], ஜெயந் [கனடா], பிரஜன்னன்[மீசாலை/வீ. சி. ம. வி. மாணவன்], பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24-02-2000 வியாழக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
க. தெய்வானைப்பிள்ளை
[மனைவி]

"தெய்வகம்"
மீசாலை கிழக்கு,
மீசாலை. (73960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பெரியாஸ்பத்திரியில் எக்ஸ்-றே இயந்திரம் பழுது

## மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் சேவை

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். போதனா வைத்திய சாலை, எக்ஸ்—றே பிரிவில் இயங்கி வந்த 'எக்ஸ் — றே' இயந்திரம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை முதல் பழுதடைந்ததால்எக்ஸ்–றேஎடுப்பதில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் நோயாளிகளை எக்ஸ் — றே எடுப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்தபத்து வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் இந்த ஒரேயொரு 'எக்ஸ்—றே' இயந்திரம் இயங்கிக்கொண்டிருந்த வேளையே பழுதடைந்தது. இந்த இயந்திரத்துக்கு உதவியாக இயங்கிவந்த நடமாடும் 'எக்ஸ்-றே' இயந்திரமும் அதிக அளவில் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்து வருகிறது.

தற்போது கம்பியூட்டர் முறையில் இயங்கும் புதிய எக்ஸ்—றே கருவிஒன்றேஇயங்கும் நிலையில் உள்ளது. இந்தக் கருவியும் மிகக்குறைந்த அளவிலேயே பயன் படுத்தப் படுகிறது.

இதனாலேயே தற்போது அவசிய நோயாளர்களுக்கு மாத்திரம் என்ற வகையில், எக்ஸ்-றே மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை பழுதடைந்த இயந்திரத்தை திருத்தும் பணியினை ஆஸ்பத்திரி பொறியியல் பிரிவினர்மேற்கொண்டுள்ளனர்.

(இ)

### அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு

# பட்டம் பெற்ற டாக்டரையே நியமிக்குமாறு கோரிக்கை

அச்சுவேலி, பெப். 25

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்ற வைத்தியரை நியமிக்க வேண்டும் என அச்சுவேலிப்பகுதி பொது ஸ்தாபனங்களும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையும் கோரியுள்ளன.

வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் நோயாளர்களின் நலனையும் வைத்தியசாலையின் தரத்தையும் கருத்தில் கொண்டு எம்.பி.பி.எஸ் பட்டம்பெற்ற வைத்தியரை நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் செல்வி உ. சிவபாதசுந்தரத்திடம் இது பற்றி எடுத்துக் கூறிய பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் நீண்டகாலமாக வைத்தியசாலையின் தரத்துக்குப் பொருத்தமான வைத்தியர் நியமிக்கப் படாமையைச் சுட்டிக்காட்டி உள்ளனர்.

[இ-11]

# நலன்புரி நிலையங்களில் மலசலகூடம், குழாய்க்கிணறு

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். மாவட்ட புனர்வாழ்வுப் பகுதியினரால் 8 இலட்சம் ரூபா செலவில் உரும்பிராயில் உள்ள மூன்று நலன்புரி நிலையங்களுக்கென குழாய்க் கிணறு மற்றும் மலசலகூடங்கள் என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

உரும்பிராய் தெற்கில் உள்ள செல்வபுரம், யோகபுரம், இலுப்பையடி போன்ற நலன்புரி நிலையங்களுக்கே வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து தங்கியுள்ள மக்களின் நன்மை கருதி இவை அமைக்கப்பட்டுள்ளன.

(இ-10-180)


# சேவைநலன் பாராட்டும் வரவேற்பு வாழ்த்தும்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
முன்னாள் முதல்வர்
**உயர்திரு. கு. இராஜநாயகம்**
B.A (Lond), Dip. in Ed., M.A (U.S.A)
அவர்களின் சேவையை மனமார வாழ்த்துகின்றோம்.

புதிய முதல்வர்
**வண. A.A. போல் அவர்களையும்**
துணை முதல்வர்
**உயர்திரு. N.A. விமலேந்திரன்**
அவர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்,
**SUBRA கல்வி நிறுவனம்,**
சித்தன்கேணி.

(73948)


# அறிவித்தல்

### யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான

## கிளைப் பொதுச்சபைக் கூட்டம்

### காலம்: 2000-02-27

வடக்கு — கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட துணை விதிகளின் 23 ஆம் பிரிவின் கீழ் வடக்கு — கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்டும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 1998-05-19 ஆம் திகதி 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் 2000.02.27 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் நடைபெறும்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமுகம் அளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற்கனவே கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம்.

கிளைப்பொதுச் சபைக் கூட்டங்களில் சமுகம் அளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களைக் குறித்த அறிவிப்புக்களின் படி கிளைப்பொதுச்சபை கூட்டங்களுக்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தி கூட்டுறவு இயக்கத்தினை ஜனநாயக ஆளுகை கொண்டதாகச் செயற்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

செ. கு. சண்முகநாதன்,
கூ. அ. உ. ஆணையாளர்,
யாழ். மாவட்டம்.

கூட்டுறவு அலுவலகம்,
இல. 18/10, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/11164)


உ
அம்பாள் துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை

## 18 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்ட

# பரிசளிப்பு விழா

27 -- 02 -- 2000 ஞாயிற்றுக்கிழமை

அன்புடையீர்!

வணக்கம் ஷெ விழா துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் பதினெட்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்ட சிறப்பு விழாவாகும். இவ்வரிய விழாவுக்கு அன்பர்கள், நலன் விரும்பிகள், ஆன்மீகப் பெரியோர்கள், அனைவரையும் மிகுந்த அன்போடும் பணிவோடும் அழைக்கின்றோம்.

இடம்: **நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம்.**
(345, கோயில் வீதி, நல்லூர்)
காலம்: **27-02-2000 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.00 மணி**
தலைவர்: **கலாநிதி, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,** J. P. அவர்கள்
முதன்மை விருந்தினர்: **செல்வி கிருபாதேவி வீரசிங்கம்** B. A., B. Com., M. Phil. அவர்கள்
(அதிபர், சாவகச்சேரி மகளிர் கல்லூரி)
சிறப்பு விருந்தினர்: **திரு. செ. மகாலிங்கம் அவர்கள்**
(திட்டமிடல் பணிப்பாளர், யாழ். அரச செயலகம்)
**திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள்**
(இளைப்பாறிய நீதிபதி)

## நிகழ்ச்சி விவரம்

தேவாரம்:
வரவேற்புரை: **செல்வி ஸ்ரீ. கலைவதனி அவர்கள்**
ஆண்டறிக்கை:
ஆசியுரை: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
(நல்லை ஆதின குரு முதல்வர்)
வாழ்த்துரை: **திருமதி ஆ. சிவஞானசுந்தரம் அவர்கள்**
(அதிபர், யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம்)
தலைமையுரை:
முதன்மை விருநதினர் உரை:
சிறப்பு விருந்தினர் உரை:
பரிசளிப்பு நிகழ்வு:
நன்றியுரை: **திரு ஆறு. திருமுருகன் B. A. அவர்கள்**

## கலை நிகழ்ச்சிகள்

(1) சிறுவர் அபிநயப் பாடல் (2) குழு நடனம்
(3) நாட்டிய நாடகம்

இல்லக் கீதம்:

அன்பர்கள் அனைவரையும் விழாவிலும் அதனை அடுத்து இடம்பெறும் மதிய உணவு விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

வணக்கம்

தங்கம்மா அப்பாக்குட்டி J. P.
தலைவர்

மலைமகள் இராமநாதன்
நா. தவநாதன்
செயலாளர்கள்

அ. சண்முகநாதன்
தனாதிகாரி

(சி/11002)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடாநாட்டு தொலைபேசி இணைப்பு: வருட இறுதிக்குள் 3,000 ஆக உயரும்

## ரெலிக்கொம் பொறியியலாளர் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 25
''இவ்வருட இறுதிக்குள் யாழ். குடாவில் மொத்தம் 3 ஆயிரம் தொலைபேசி இணைப்புகள் ரெலிக்கொம் நிறுவனத்தினால் வழங்கப்பட்டு விடும்.''

— இவ்வாறு 'ரெலிக்கொம்' பிராந்தியப் பொறியியலாளர் எஸ். அன்ரனிராஜன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:—

1985 ஆம் ஆண்டு வரையும் 18 கிராமியப் பரிவர்த்தனை நிலையங்கள் ஊடாக ஆயிரம் தொலைபேசி இணைப்புகளும் பண்ணைப் பரிவர்த்தனை நிலையம் மூலம் இரண்டாயிரத்து 200 இணைப்புகளும் வழங்கப்பட்டன.

இப்போது இதுவரை புதிதாக இரண்டாயிரத்து 300 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வருட இறுதிக்குள் மேலும் 800 இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

தொலைபேசி இணைப்புப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களில் 5 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் எம்மிடம் உள்ளன.

1985 ஆம் ஆண்டு வரை 3 ஆயிரம் பேர் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றிருந்தனர். இவர்களில் பலர் இன்று இடம் பெயர்ந்துவிட்டனர். புதிய தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படும் போது இவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.— இப்படி அவர் மேலும் கூறினார். (உ-5)

# கடற்றொழில் கருவிகள் கொழும்பிலிருந்து தருவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட 30 லட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களும் 'ஹண்டி' கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக கொழும்பில் தேங்கிக் கிடந்த இக் கடற்றொழில் உபகரணங்கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டதைத் தொடர்ந்து இன்று முதல் இந்த உபகரணங்கள் சமாச பணிமனையில் வைத்து அங்கத்தவர்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளன. (உ-5)


உ
ஓம் சக்தி

## இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

எமது நாட்டிலே நாதஸ்வரத்தினை உருவாக்கும் ஒரே கலைஞர்
அராலியூர் 'சிற்பகலா விநோதன்'
விஸ்வப் பிரம்மஸ்ரீ
**சின்னத்தம்பி அமரசிங்கம்**
அவர்கள்
ஈழத்து நாதஸ்வரக் கலைஞர்களால்
''இரதாதி நாதஸ்வர சிற்ப கற்பகம்''
எனும் விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டமையை மனதாரப் பாராட்டி எமது இதயம் கனிந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரது தெய்விகப் பணி மேன்மேலும் சிறக்கவும் அவர் சகல சௌபாக்கியங்களும் பெற்று நிறை வாழ்வு வாழவும் எல்லாம் வல்ல அன்னை நயினை ஸ்ரீநாக பூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

''அறங்காவலர் சபை''
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
நயினாதீவு.
(73951)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
14
—
05
—
1933



மறைவு
26
—
01
—
2000

### அமரர் சுப்பிரமணியம் கனகரெட்ணம்
(வேலணை கிழக்கு)

எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அதேவேளை, யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களுக்கும் ஊழியர்களுக்கும் அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும் வேறு வழிகளில் உதவி புரிந்த உற்றார், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (25-02-2000) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

'ஆயர்பாடி'
மாரி அம்மன் வீதி,
திருநெல்வேலி.
(73949)

## வலயமட்டப் பரீட்சை

வலிகாமம் தெற்கு, பெப். 25
வலிகாமம் கல்விவலய பாடசாலைகளின் முதலாம் தவணைப் பரீட்சைகள் வலய மட்டத்தில் நடைபெற உள்ளன.

தரம் 3,4,5,11 ஆகியவற்றுக்கு மட்டுமே பரீட்சைகள் நடைபெறும். ஏனைய தரங்களுக்கு கணிப்பீடுகள் இடம் பெறும்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கையை மார்ச் முதலாம் திகதிக்கு முன் வலய பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

முதலாம் தவணைப் பரீட்சைகள் மார்ச் 20 ஆம் திகதியளவில் நடைபெறும். (உ-152)

## சேவைக் காலப் பயிற்சி

வலிகாமம் தெற்கு, பெப். 25
தரம் ஒன்றுக்கான ஆசிரியர்களுக்குரிய சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் நாளையும் நாளை மறுதினமும் வலிகாமம் கல்விவலயத்தில் இடம்பெற உள்ளன.

சங்கானை, சண்டிலிப்பாய்க் கோட்டக்கல்வி ஆசிரியர்களுக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் —

தெல்லிப்பழை, உடுவில் கோட்டக்கல்வி ஆசிரியர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் பயிற்சி வகுப்புகள் இடம் பெறும். (உ-152)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், பெப். 25
மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச பொது மருத்துவம், கண்பார்வை பரிசோதனை முகாம் ஆகியன நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற உள்ளது.

இந்த மருத்துவ முகாமில் இரத்த அழுத்தம், சரும வியாதி, மலேரியா, நீரிழிவு ஆகிய நோய்கள் தொடர்பான பரிசோதனைகளும் பொது மருத்துவ பரிசோதனைகளும் இடம்பெறும். வசதி குறைந்தவர்களுக்கு இலவசமான மருந்து வழங்கப்படும். கண்பார்வைப் பரிசோதனை முகாமும் இடம்பெறும். (உ-6)

### அச்சுவேலியில் உற்பத்தியாகும்

# கோழிக்குஞ்சுகளின் விலை நிர்ணயம் குறித்து ஆட்சேபம்

யாழ்ப்பாணம், பெப். 25
அச்சுவேலி கோழிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் கோழிக்குஞ்சுகளுக்கு மாகாண கால் நடை சுகாதார திணைக்களம் நிர்ணயித்துள்ள விலை குறித்து யாழ். மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் ஒரு நாள் புறோயிலர் குஞ்சுகள் 35 ரூபாவுக்கும் ஒரு நாள் கலவன் குஞ்சுகள் 22 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என மாகாண கால் நடை சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர் சுற்று நிருபம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தச் சுற்று நிருபம் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விரிவாக ஆராயப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் முட்டையிடும்இனக் கோழிக்குஞ்சுகள் 20 ரூபாவிற்கும் புறோயிலர் இறைச்சிக்கோழிக் குஞ்சுகள் 30 ரூபாவிற்கும் விற்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதுடன், கோழிக் குஞ்சுகளின் விலையைக் கூட்ட வேண்டாமென்றும் அரச அதிபர் உத்தரவிட்டிருந்தார்.

தற்பொழுது மாகாண கால் நடை சுகாதார திணைக்களம் கோழிக்குஞ்சுகளின் விலையை அதிகரிக்குமாறு சுற்று நிருபம் வெளியிட்டது ஆட்சேபனைக்குரியது என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை உப்புவெளி, பூந்தோட்டம், கல்லடி ஆகிய இடங்களிலுள்ள கோழிப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் ஒரு நாள் புறோயிலர் குஞ்சுகள் 28 ரூபாவுக்கும் பேட்டுக் குஞ்சுகள் 28 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டுமென விலை நிர்ணயம் செய்துள்ள மாகாணத் திணைக்களம், யாழ். மாவட்டத்தில் மட்டும் கோழிக்குஞ்சுகளின் விலையை அதிகரிப்புச் செய்துள்ளது குறித்தும் இக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மாகாணத் திணைக்களச் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விலையை நிராகரித்து மாவட்ட விவசாயக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட விலைகளில் அச்சுவேலியில் உற்பத்தி செய்யப்படும் கோழிக்குஞ்சுகளைப் பொதுமக்களுக்கு விநியோகிப்பதென இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ-5-15)

## உதவிப் பணம்

நவாலி, பெப். 25
சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம், காசநோய், தொழுநோய்ஆகியவற்றுக்கான உதவிப் பணம் என்பவற்றைப் பெறுபவர்களுக்கான ஜனவரி மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தமது தபாலகங்களுக்குச் சென்று பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-100)

### கொழும்புத்துறைக் கடலில்

# பொச்சுமட்டை புதைக்க படைத் தரப்பில் அனுமதி

## தும்புத் தொழிலாளர்களுக்கு

யாழ்ப்பாணம், பெப். 25
கொழும்புத்துறை கடற்கரைப் பகுதியில் தும்புத் தொழில் செய்பவர்கள் பொச்சுமட்டைகளைப் புதைப்பதற்கு அப்பகுதிப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இப்பகுதி மக்கள் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதையடுத்தே மேற்படி அனுமதி வழங்கப்பட்டது.

தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இக்கடற்கரையில் பொச்சுமட்டைகளைப் புதைக்க முடியும் என்று கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த டிசெம்பர் மாதம் கொழும்புத்துறை கடற்பகுதியில் மீன்பிடி அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து பொச்சுமட்டைகள் புதைப்பதும் நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

கொழும்புத்துறையிலிருந்து இடம்பெயர்ந்தகுடும்பங்களில் தற்போது 50 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளதையடுத்து பொச்சுமட்டைகள் புதைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## ஆலயம் திறப்பு

சங்கானையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புனித சலேசியார் ஆலயம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். ஆயர் பேரருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்படும்.

இரண்டாயிரமாம் ஆண்டின் ஆலயத் திருவிழாக் கூட்டுத் திருப்பலியும் அன்றே ஒப்புக்கொடுக்கப்படும். (உ-6)


## V.K.N TELECOMMUNICATION

23-02-2000 புதன்கிழமை
முதல் எமது சேவையை ஆரம்பித்திருக்கின்றோம்,
உள் நாட்டுத்
தொலைபேசி இல. 021 - 3475
வெளி நாட்டுத்
தொலைபேசி இல. 0094 - 021 -3475
நன்றி!
154, ஆடியபாத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(மருத்துவபீட புதிய கட்டடத் தொகுதி முன்பாக)
(73941)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தூரத்தில் படகு ஒன்றின் சத்தம் கேட்டது: அதனைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு!

## காயமடைந்த இந்திய மீனவர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.25

"அதிகாலையில் இயந்திரப் படகு ஒன்றின் சத்தம் தூரத்தில் கேட்டது. அதனைத் தொடர்ந்து எமது படகை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது."

காங்கேசன்துறைக் கடலில் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தமிழக மீனவரான சேவையர் சபேசன் நிக்கலஸ் என்பவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"தூத்துக்குடியிலிருந்து கடந்த ஞாயிறு இரவு நாங்கள் நான்கு பேர் ஒரு படகில் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றோம்.

எமது படகு திசைமாறி வேறு திசையில் சென்றதால் நடுக்கடலில் எமது படகு அலைந்து கொண்டிருந்தது. அதிகாலை மூன்று மணியளவில் சில மைல் தூரத்தில் இயந்திரப் படகு ஒன்றின் சத்தம் கேட்டது.

அதனைத் தொடர்ந்து சரமாரியாக எமது படகினை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. நானும் மிக்கைல் தோமஸ் என்பவரும் காயமடைந்தோம்.

எமது படகினை அண்மித்து வந்த நீலநிற உடை அணிந்தவர்கள் காயங்களுடன் இருந்த எங்களையும் மற்றுமிருவரையும் கைது செய்து கரைக்குக் கொண்டு வந்து காயங்களுக்கு சிகிச்சை அளித்த பின் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

எம்மைக் கைது செய்தவர்கள் இலங்கைக் கடற்படையினர் என்பதை அறிந்து கொண்டோம். அவர்கள் பேசிய மொழி எமக்கு புரியவில்லை. அதனால் எம்மை அவர்கள் விசாரணை எதுவும் செய்யவில்லை.

காயமடைந்த எங்கள் இருவரையும் ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளதுடன் எம்முடன் கைது செய்யப்பட்டவர்களான மைக்கல் அன்ரனி பெர்ணான்டோ, மாடசாமி சுப்பிரமணியம் ஆகியோர் காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எங்கள் நால்வரையும் மனிதாபிமான அடிப்படையில் எமது தாயகத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகின்றோம்."

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-5)

---

## வன்னிக்கான.....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு போட்டுவிட்டு சென்றுவிடுமோ, கீழே காட்டுப்பகுதியான அந்தப் பகுதியில் பாம்பு, பல்லி ஏதாவது வந்து கடித்து விடுமோ என்று பயந்தபடியே இரவைக் கழிக்கிறார்கள் அந்த மக்கள்.

### கொளுத்தும் வெய்யிலில் மக்கள் அனுமதி

மறுநாள் காலை 7.30க்கு மல்லாவியில் இருந்து செஞ்சிலுவை சர்வதேசக்குழுப் பிரதிநிதிகள் வந்து சேரும்வரை அங்கேயே தூங்கி வழிந்தபடி காத்திருக்கிறார்கள். இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வவுனியாவிலிருந்து வரும் செஞ்சிலுவை சர்வதேசக்குழுப் பிரதிநிதிகளும் வந்து சேர்ந்தவுடன் இரு பகுதியினரும் வானொலித் தொடர்பை ஏற்படுத்திக் கதைத்த பின்னர் இராணுவத்தினரால் அங்கு போட்டிருக்கும் முட்கம்பிவேலி அகற்றப்பட்ட பின்பு செஞ்சிலுவை சர்வதேசக்குழுப் பிரதிநிதிகளும் முன்னேறி வந்து நடுவிலே நிற்க மக்களை உள்ளே அனுமதிக்கும் பணி கொளுத்தும் வெய்யிலில் ஆரம்பமாகும்.

இரு பக்கமும் முட்கம்பி அடிக்கப்பட்ட பாதையூடாக மக்கள் வரிசைக்கிரமமாக வரும்படி அழைக்கப்படுவர். ஆனால் காத்திருப்பவர்களோ முன்னே போய்விடவேண்டுமென்பதற்காக ஓடிவந்து முட்கம்பிப் பாதைக்குள் புகுந்து நெருக்குப்படுவார்கள். இதனால் இழுபட்டு நெரிபட்டு முட்கம்பி வேலியில் விழுந்து தினமும் பலர் காயமடையும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. ஏனென்றால் ஆயிரக் கணக்கானோர் காத்திருக்க 500 பேரை மட்டுமே இராணுவம் உள்ளே அனுமதிப்பதால் எப்படியாவது போய்விடவேண்டும் என்று முண்டியடிப்பவர்களே இவ்வாறு காயமடைபவர்களாவர்.

தவிர அன்றைய தினத்தை விட்டால் அடுத்து மக்களை எடுக்கும் தினத்தில் கட்டாயமாக மக்களை எடுப்பார்கள் என்பதும் நிச்சயமற்றதாகவே காணப்படுகிறது. ஏதோ ஒரு காரணத்தால் மக்களை பல வாரங்கள் எடுப்பது தடைப்பட்டுவிடும் சூழ்நிலையும் காணப்படுகிறது. அப்படி மக்களை உள்ளே அனுமதிக்காத நாள்களில் அதுபற்றி அங்கே காத்திருக்கும் மக்களுக்கு உரியமுறையில் அறிவிக்கப்படுவதில்லையாம். இதனால் அவர்கள் அவ்வாறான நாள்களில் கொளுத்தும் வெய்யிலில் மாலைவரை காத்திருந்துவிட்டு திரும்பிச் செல்ல வேண்டியநிலையும் ஏற்பட்டு வருகின்றது.

இவ்வாறான காரணங்களினாலேயே பயணிகள் காயப்பட்டாலும் பரவாயில்லை என்று இழுபட்டு நெரிபட்டு உள்ளே இராணுவக் கட்டுப்பாட்டினுள் சென்றுவிடத் துடிக்கின்றனர்.

வன்னியிலிருந்து வருவது இவ்வளவு கஷ்ட துன்பமானதென்றால் வவுனியாவிலிருந்து வன்னிக்குச் செல்வதென்பது படையினரின்பலத்த கெடுபிடி நிறைந்ததாகவே உள்ளது. ★

---

# இல்லமெய்வல்லுநர் போட்டிகள்

நல்லூர்,பெப்.25

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை இல்லமெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க.சண்முகலிங்கம் தலைமையில் பாடசாலைக்கு அண்மையில் உள்ள மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.காங்கேயனும் சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆலோசகர் திருமதி க.பிரகதீஸ்வரசர்மா, வைத்தியகலாநிதி ஏ.உமாகாந்தன், அரியாலை மத்தி வடக்கு கிராம உத்தியோகத்தர் ந.சர்வகுணசீலன் ஆகியோரும் கலந்து கொள்வர். (3-103)

* * *

குருநகர்,பெப்.25

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 1.30மணிக்கு அதிபர் இ.குணநாதன் தலைமையில் வித்தியாலய விளையாட்டுத்திடலில் நடைபெற உள்ளது.

யாழ். வலயக் கல்வித்திணைக்களப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) நா.வரதராசா பிரதம விருந்தினராகவும், கோப்பாய் கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் மற்றும் ச.புவிச்சந்திரன், அச்செழு கிராம அபிவிருத்திச்சபைச் செயலாளர் பொ.சிவலோகநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (3-51)

* * *

தென்மராட்சி,பெப்.25

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப.1.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

இந்தப் போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ.கணேசனும், சிறப்பு விருந்தினராக கொடிகாமம் வணிகர் மன்ற தலைவர் க.சின்னத்தம்பியும் கலந்து கொள்வர். (117-133)

* * *

வலி.வடக்கு,பெப்.25

தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி.சந்திரகுமார் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும், கெளரவ விருந்தினராக தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ.வ. கணேசலிங்கமும் கலந்து கொள்வர். (8-86)

* * *

பருத்தித்துறை,பெப்.25

பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பி.ப. 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி சி.சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வித் திணைக்கள முறைசாராப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால் கலந்துகொள்வார். (3-118)

* * *

அளவெட்டி வடக்கு அ.மி. த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.00மணிக்கு பாடசாலை அதிபர் செ.பி.இளமுருகனார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழைக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் பிரதம விருந்தினராகவும் இலங்கை வங்கி காங்கேசன்துறைக் கிளை முகாமையாளர் என்.சீவரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்.

* * *

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய இல்லவிளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

* * *

வலி.கிழக்கு,பெப்.25

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச செயலக கணக்காளர் ச.குகதாஸ"ம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் கலந்து கொள்வர். (3-180)

* * *

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 10மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் கே.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும்.

வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.துரைராஜா பிரதமவிருந்தினராக இதில் பங்குபற்றுவார். (3)

## துர்க்காபுரம் மகளிர் இல்ல ஆண்டு விழா ஞாயிறன்று!

நல்லூர்,பெப்.25

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 18ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய பரிசளிப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்கா தேவி மணிமண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி கிருபாதேவி வீரசிங்கமும் சிறப்பு விருந்தினராக யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் செ.மகாலிங்கமும் கலந்துகொள்வர்.

வரவேற்புரையை செல்வி [illegible] கலைவதனியும் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளும், வாழ்த்துரையை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரமும் நன்றியுரையை ஆறு.திருமுருகனும் நிகழ்த்துவர்.

சிறுவர் அபிநயப்பாடல், குழு நடனம், நாட்டிய நாடகம் என்பனவும் இடம்பெறும். (இ-103)

### கைது

மட்டக்களப்பில் களுவாஞ்சிக்குடியில் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டார்.

செட்டிபாளயத்தைச்சேர்ந்த [illegible] (வயது 55) என்ற [illegible] பிள்ளைகளின் தந்தையே கைதானவராவார். (ஐ-க-3)

---

## வண்ணை சிவன் உற்சவம்

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தான (வண்ணை சிவன் கோயில்) வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 22 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 17ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 19ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 20 ஆம் திகதி தீர்த் தோற்சவமும் 21ஆம் திகதி பூங்காவனமும் இடம்பெறும். (உ-6)

# 'பெப்ஸி' கிண்ணப் போட்டி: இந்தியா 225 ஓட்டங்கள்

மும்பாய்,பெப்.25

இந்திய - தென்ஆபிரிக்கா அணிகளுக்கு இடையில் நேற்று மும்பாயில் ஆரம்பமான 'பெப்ஸி' கிண்ணத்துக்கான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது நாளில் இந்திய அணி 225 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் 97 ஓட்டங்களையும் அஜித் அகாகர் ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென்ஆபிரிக்கா அணியின் பந்து வீச்சில் கலிஸ் 3 விக்கெட்டுக்களையும் அலென் டொனால்ட், பொலக், குறேஞ்சே ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

நேற்றைய ஆட்டநேர இறுதியில் தென்ஆபிரிக்கா அணி விக்கெட் இழப்பு எதுவும் இன்றி 27 ஓட்டங்களைப் பெற்றது.

## கலைகள் மேம்பாட்டு கழக இறுதிநாள் போட்டி

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் இசைநாடக, நாட்டுக்கூத்து மற்றும் கிராமிய கலைப் போட்டிகளின் இறுதிநாள் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாசம் வித்தியாசாலையில் கழகச் செயலாளர் செ.மெற்றாஸ்மயில் தலைமையில் நடைபெறும்.

இறுதிநாள் போட்டிகளில் யாழ்ப்பாணம் தைரியநாதன் குழுவினரின் "பூதத்தம்பி", நெடுந்தீவு அமிர்தநாயகம் குழுவினரின் "அரிச்சந்திர மயான காண்டம்", கரவெட்டி வேலாயுதம் குழுவினரின் "நல்லதங்காள்", கரவெட்டி கே.எஸ்.சந்திரன் குழுவினரின் "சத்தியவான் சாவித்திரி" ஆகிய இசை நாடகங்கள் இடம்பெறவுள்ளன.

விசேட அடையாள அட்டைப் பிரிவு, கருத்திட்ட முகாமையாளர் தி.திருலிங்கநாதன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-7)

## வேலைநிறுத்தம் முடிவு

வவுனியா லொறிச்சாரதிகளும், ஊழியர்களும் கடந்த சனிக்கிழமை மாலை முதல் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை படையினருக்கும் - வேலைநிறுத்தக்காரருக்கும் இடையில் இடம்பெற்ற இணக்கப்பாட்டை அடுத்து கைவிடப்பட்டது.


புலமைப்பரிசில் ~ 2000

28ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்

க.சிவசொருபன் — யா.இ.ஆ.பா.

ச.லக்ஷிகா — யா.இ.ஆ.பா.

க.கஜனன். — யா.இ.ஆ.பா.

யோ.சர்மிந்தா — யா.இ.ஆ.பா.

கை.தனுஷன் — யா.பரியோவான் கல்.

சி.ஆதிரையன் — யா.இ.ஆ.பா.

தி.உமாசங்கர் — யா.உரும்பிராய் சை.த.வி.

அடுத்த பரீட்சை 27.02.2000

BOND - யாழ்நகர். (73968)



ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கந்தரோடை

இல்ல மெய்வல்லுநர் போட்டி 2000

காலம்: இன்று (25-02-2000) வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணி

தலைவர்: திரு.க. சிவாஜி (அதிபர்)

பிரதம விருந்தினர்

ஸ்கந்தா மைந்தன் திரு.மு.விஜயரகுநாதன்

(பிரதம கணக்காளர்-போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்

திருமதி தி.யோகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஆசிரியை, ஸ்கந்தா)

திரு.அ.வடிவேல்

(ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்-கனடா)

கெளரவ விருந்தினர்கள்

திரு. அ.தற்பரானந்தன்

(உதவிக்கல்விப்பணிப்பாளர், உடுவில் கோட்டம்)

திரு.வி. பாலசிங்கம்

(உதவிக்கல்விப்பணிப்பாளர், உடற்கல்வி)

பரிசில் வழங்கல்

திருமதி குககுமாரி விஜயரகுநாதன்

(ஆசிரியை, நல்லூர் இந்து பெண்கள் பாடசாலை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

(73964)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஆசிரியருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்றுவரும் தொலைக் கல்விப் பயிற்சி நெறியில் 1997 ஆம் ஆண்டு தொடர்கல்வி பயிற்சியை பின்பற்றிய ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு யாழ். இந்து கல்லூரியில் இடம்பெறும்.

அன்றையதினம் **1999/2000** ஆண்டு காலப்பகுதிக்கான பயிற்சி ஆசிரியர்களுக்கு செயலமர்வு ஒன்றும் நடைபெற உள்ளதாக சிரேஷ்ட போதனாசிரியர் தெரிவித்தார். (இ-4)

## யுத்தம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மனைவிமார்களும் அநாதைகளாக்கப்பட்டு வருகின்றனர்.

எவ்வளவு காலத்திற்கு இந்த நிலைமையை எமது நாடு தாங்கிக் கொள்ளும். யுத்தம் எவ்வாறு ஆரம்பித்தது பற்றியோ அல்லது இதற்கு பின்னணியில் யார் இருந்தனர் என்பது பற்றியோ தற்போது விவாதிப்பதில் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை.

இன்று எமக்குத் தேவையானது எல்லாம் இந்தப் பிரச்சினைக்கு புத்திசாலித்தனமான தீர்வைக் காண்பதற்காக சகல வேறுபாடுகளையும் மறந்து அர்ப்பணிப்பு சிந்தனையுடன் செயற்படுவதாகும் இப்படி அவர் கூறினார். (இ-7-3)

## சிப்பாய்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவரான அஜித் போயாகொட தெரிவித்ததாக வெளிவந்த தகவல் குறித்து கேட்ட போதே அரசு தரப்பில் இருந்து எந்தவித பதிலும் கிடைக்கவில்லை என்று ஹர்ஷா குணவர்த்தனா தெரிவித்தார்.

இதேநேரம் உண்ணாவிரதிகளைப் பார்வையிடச் சென்ற உறவினர்கள் இன்று அங்கிருந்து புறப்படுவதாகவும் அவர் சொன்னார்.

இன்று நண்பகல் அளவில் பிரமணாலங்குளத்தை வந்தடையும் அவர்களை அழைத்துச் செல்ல படை அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர் என்றும் -

அவர்களுக்கு வவுனியா தளத்தில் வைத்து மதிய உணவு வழங்கவுள்ளதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-4-8)

## சிங்கள......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனா தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று வவுனியாவுக்கு விஜயம் செய்த தென்னிலங்கைச் செய்தியாளர் மத்தியில் பேசுகையிலேயே பிரிகேடியர் இது குறித்துத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் வவுனியா நகரத்தை பிரதான இலக்காகக் கொண்டு பல்வேறு தாக்குதல்களை முடுக்கிவிட்டிருந்தனர். எனினும் படையினர் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வவுனியா நகரத்தின் பாதுகாப்பை உறுதிசெய்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக வவுனியா நகரில் இயங்கி வந்த ஆயுதம் தரித்த குழுக்களின் நடவடிக்கைகளும் படையினரால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-3-7)

## கந்தையனை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆணையாளர் அண்மையில் அறிவித்திருந்தது தெரிந்ததே.

இந்நியமனம் தொடர்பாக நேற்று நடைபெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாநகரசபை மேயராக நியமிக்கப்பட்ட இருவர் கொல்லப்பட்டமையினால் மேலும் ஒருவரை மேயராக நியமனம் செய்வது பற்றி கட்சி ஆராய்ந்து வருகின்றது.

எது எப்படியாக இருந்தபோதிலும் இம்மாதம் 27ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் யாழ். மேயர் நியமனம் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## மாநகரசபை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள் தொடர்பாக ஆராயப்பட்ட சமயமே உறுப்பினர்களிடையே காரசாரமான விவாதம் இடம் பெற்றது.

23 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் பத்து உறுப்பினர்கள் மட்டுமே நேற்றைய கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

கூட்ட ஆரம்பத்தில் அமரர் குமார் பொன்னம்பலத்தின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ-3-5-10)

## புலிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

வன்னி நிலைமை தொடர்பாக அவர் விளக்கம் அளிக்கையில் மேலும் கூறியதாவது:-

வன்னியில் பெரும் தாக்குதலை நடத்த விடுதலைப் புலிகள் ஒன்று கூடி வருவதாகத் தகவல் கிடைத்தது.

அவர்களின் அந்தச் செயலைத் தடுக்கும் வகையில் படையினர் திடீர் திடீர் என்று மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு தெரியாமல் இரகசியமாக மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கையில் நல்ல பலன் கிடைத்துள்ளது - என்றார்.

## குருநகர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரிகளுக்கும் இடையில் ஏற்பாடாகியுள்ள சந்திப்பை அடுத்து ஞாயிறு அல்லது திங்கள் முதல் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

குடாக் கடலில் கரையில் இருந்து வெளிச்சக்கட்டை என்னும் இடம் வரையான கடற்பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும் என்றும் -

அதிகாலை முதல் 14 மணி நேரம் கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும் என்றும் அவர் மேலும் சொன்னார். (இ-3)

## நோர்வேயின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாதாந்தக் கூட்டம் முடிவடைந்த பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பிரதிமேயர் என்.ரவிராஜ் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தொடரும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். யுத்தத்தை நிறுத்தும் வகையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்து வரும் நோர்வே அரசுக்கு எமது ஆதரவினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடும் அனைவரும் முழு மனதுடன் செயற்பட்டு தமிழ் மக்களின் இன்னல்களைத் தீர்த்து வைக்கவேண்டும்.

இத்தகைய சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் யாழ். மாநகர சபை உறுப்பினர்களும் ஒத்தாசை வழங்கத் தயாராக இருக்கின்றனர் - என்றார்.

## வலைபந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

15,17,19 ஆகிய வயதுப் பிரிவுகளுக்கு நடைபெறும் இந்தச் சுற்றுப் போட்டியில் இன்று கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 2.30 மணி முதல் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

✦வேம்படி எதிர் கன்னியர் மடம் ம.வி

✦ கொழும்புத்துறை இந்து ம.வி எதிர் சென் ஜேம்ஸ் ம.வி

**17 வயதுப் பிரிவு**

✦ வேம்படி எதிர் சென். ஜேம்ஸ்: ம.வி

✦ கொழும்புத்துறை இந்து ம.வி. எதிர் கன்னியர்மடம் ம.வி. (இ-4)




28/1,
ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.


## புலிகளின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வகையில் தயாரித்து வைத்திருந்தார் எனவும் -

மட்டக்களப்பைச் சேர்ந்த இந்த இளைஞர் வர்த்தக முகாமைத்துவக் கற்கை நெறியைப் பின்பற்றுவதாகக் கூறியே நீர் கொழும்புக்கு வந்தார் எனவும் -

இவர் கொடுத்த தகவலின் பேரில் மேலும் இரண்டு பேரைத் தாம் கைது செய்துள்ளதாகவும் - பொலீஸார் தெரிவித்தனர்.


**ஷண்ணின் வீடியோ CD வெளியீடுகள்**

அர்ஜுன் நடிப்பில்
* சுதந்திரம்
கமலின் புரட்சித் தயாரிப்பில் தமிழ்ப்பிரதி
* ஹேராம்
பிரபுவின நடிப்பில்
* தைபொறந்தாச்சு
(தெளிவான பிரதி)
* ஹேராம்
(ஹிந்தி)
போஸ்ரர் இலவசம்
(73974)

**இன்றைய வீடியோ CD வெளியீடு**

* தைபொறந்தாச்சு
அடுத்த வெளியீடு
அர்ஜுன், ரம்பா நடித்த
* சுதந்திரம்
**ஆர்க் வீடியோ லைபிறறி**
அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/11185)

**எமது புதிய ஓடியோ CD வெளியீடு**

A.R.ரகுமானின்
* அலைபாயுதே
**மெலோடியஸ் மியூசிக்**
303, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/11183)

**வீடியோ CD வெளியீடு**

அர்ஜுன் நடித்த
* சுதந்திரம்
**விஷ்ணு வீடியோ**
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.
(C/11182)

**இன்றைய ஓடியோ CD அதிரடி வெளியீடு**

இசைப்புயல்
A.R.ரகுமானின்
*அலைபாயுதே
* உனக்காக மட்டும்
* காதல் வானிலே
* அன்னை
**மூர்த்தி வீடியோ சென்ரர்**
மானிப்பாய்.
T.P:2884 (C/11186)

**எமது நேற்றைய வீடியோ CD வெளியீடு**

பிரபு, கார்த்திக் நடிக்கும்
* தைபொறந்தாச்சு
**இன்றைய வீடியோ CD வெளியீடு**
* சுதந்திரம
ஐங்கரன் ஒரிஜினல் வெளியீடு
* முதல்வன்
* பாட்டாளி
பிரமிட் CD வெளியீடு
* ஹலோ
* உன்னருகே நானிருந்தால்
**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(C/11184)

# HITECH
## College of Computer Studies

2000/2001 ஆம் கல்வி ஆண்டுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.

Royal Fellowship Exam **இல் சித்தியடைந்தமாணவர்களுக்கும் மற்றும் புதிய பிரிவு களுக்குகான பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளவிரும்புவோருக்குமான பயிற்சிநெறிகள் 28-02-2000இல் ஆரம்பமாக உள்ளன. மேற்படி பரீட்சையில் சித்தி பெற்றவர்களும் புதிய பிரிவில் சேரவிரும்பும் மாணவர்கள், உத்தியோகஸ்தர்கள் 28-02-2000க்கு முன்பு உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**Diploma in MS Office**
CourseContents:
Introduction to computer
Microsoft Windows 2000
Microsoft word 2000
Microsoft Excel 2000
Microsoft Access 2000
Microsoft Powerpoint 2000
Free Disk & Modules
Course Fee: 7000/-
Duration:4 Months

**Diploma in S/W Engineering**
CourseContents:
Introduction to Computers
Principal of programming
DBMS
C++Part I
Visual Basic
Access
Corel Draw
C++ Part 2
ORACLE
Excel
Network
Systems- Analysis &Design
Project
Free Disk & Modules
Course Fee:15000/-
Duration:10 Months

**Certificate Courses**
Course Contents:
Ms word 2000
Ms Excel 2000
Ms Access 2000
Ms Powerpoint 2000
C/C++
dBase IV
Network
Turbo Pascal
Free Disk & Modules
Course Fee: 2000/-Each
Duration: 04 Months

**Diploma in Hardware Engineering**
Course Contents:
Introduction to Computers
Basic Electronic
Digital Electronic
Hardware Concepts
Assemble a Complete PC System
Software Installation & Configuration
Handling Diagnostic Tolls
Networking, Fax Modem Connection
Computer Virus, Trouble shooting
Free Disk & Modules
Course Fee: 12000/-
Duration: 08 Months

**Diploma in Data Processing & Management System**
Course Contents:
Introduction to Computers
DBMS(Theory)
Network
Data Processing
Access
ORACLE
DBMS(Packages)
Visual Basic
Project
Free Disk & Modules
Course Fee:12000/-
Duration:08 Months

**Certificate Courses**
Course Contents:
Visual Basic 6.0
Visual C++ 6.0
Visual Foxpro 6.0
ORACLE
Power Builder
Free Disk & Modules
CourseFee:4000/-Each
Duration: 06 Months

Director HITECH
* Only HITECH Trains you to be a Computer Professional *
(73922)
K.K.S.Rd, Kokkuvil.

# STP COMPUTER WORLD

1. புதிய கற்கைநெறிகள்
- Visual Basic
- Page Maker

**ஆரம்பம்: 27-02-2000 (ஞாயிறு) காலை 11.00மணி**

2. பதிவு
**புலமைப்பரிசில் திட்டத்தில் இணைந்த மாணவர்கள் 04-03-2000 முன் தவறாது பதிவு செய்துகொள்ளவும்.**

3. கருத்தரங்கு
**எமது நிறுவனத்தில் தற்பொழுது பயிற்சி பெறுகின்ற, புதிதாகப் பதிவுசெய்துள்ள மாணவர்களுக்கான விஷேட கருத்தரங்கு:**

காலம் : **26.02.2000 காலை 10.00 - 12.00 மணி**
பங்குபற்றுபவர் : Mr. S.Divaharan
B.Sc., PG. Dip.in Compu.Tech.
(Senior Systems Analyst)
விடயம் : *java, internet and future developements.*

நிர்வாகி
T.P: 2674
E-mail:- stpcom@sltnet.lk
(C11174)
No:54A, Palaly Road,
Kantharmadam,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-02-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.